129

ஆனந்தோதயம்

மலர் 2 ஜூலை, 1951 இதழ் 7.

129
3-51.

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
10 JUL 1951
MADRAS



அலைகடல் படகு
—சித்திரம்

எல்லாம் தொழிலாலே
—பாட்டு

நாகப்பன்
—விரர்

உயர்ந்தரக ஜவுளிகள்

- காட்ஸ்வால்
- ஸான்போரைஸ்ட் டிரில்கள் & ஸூட்டிங்குகள்
- ஷர்ட்டிங்குகள்
- ஜார்ஜெட் & ஜார்ஜெட் சேலைகள்
- போர்வைகள் & ட்வீடுகள்

தயாரிப்பாளர்கள்:-

தி பெங்களூர் உல்லன், காட்டன் அண்ட்
ஸில்க் மில்ஸ் கோ., லிட்.,
பெங்களூர்.

பின்னி & கோ. (மதராஸ்) லிமிடெட்,
ஏஜெண்டுகள், காரியதரிசிகள், பொக்கிஷதாரர்கள்.

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
10 JUL 1951
MADRAS

ஆனந்தோதயம்

'தொழிலுக்கும் உழவுக்கும்
தொண்டு புரிவோம்.'

மலர் 2 | ஜூலை 1951 | இதழ் 7

பொருளடக்கம்

			பக்கம்
கர்னுடிக் மில் கிராம வாலிபர் சங்கம் (படம்)	...	...	2
மனைத்தலைவிக்கு ஒரு வார்த்தை	...	...	3
தொழில் உலகம்	...	...	5
உணவும் உடையும் (படங்களில்)	...	...	7—9
கச்சாப்பொருள் பிரச்னை	'கிங்ஸ்லே'	...	10
குற்றவாளி (கதை)	எஸ். பி. ஹர்ஷன்	...	11
எல்லோருக்கும் உணவு (கட்டுரை)	...	...	15
உஷார்! பாத்து வெட்டு தம்பி! (கார்ட்டூன்)	...	...	15
எல்லாம் தொழிலாலே (பாட்டு)	பெ. ஜெகந்நாதன்	...	16—17
செவிடர் குருடருடன் பேசும் யந்திரம்!	...	...	18
அலைகடல் படகு (சித்திரம்)	'ராஜி'	...	19
தேன் கூடு (தொடர்கதை)	'முரளீ'	...	20
கால்பந்து, ஹாக்கி கோஷ்டிகள் (படம்)	...	...	25
ரேடியோவில் காந்திஜி!	...	...	25
பயில்வானைப் பாருங்கள்! (படம்)	...	...	26
விளையாட்டு வீரர் நாகப்பன்	...	...	27
குட்டிக் கதைகள்	...	...	28
விகட வெடிகள்	...	...	29
பட்டாச்சி (பாப்பாக் கதை)	'ஜில்'	...	30

'ஆனந்தோதயத்'தில் வெளியாகும் கதைகளில் வரும் பெயர்களும் சம்பவங்களும் கற்பனை. அவை யாரையும் குறிப்பிடுவன அல்ல.

கட்டுரையாளருக்கு:—தொழிலாளர் வாழ்க்கையை அடிப்படையாகக் கொண்ட ருசிகரமான சிறுகதைகள்: சமூகவாழ்க்கைப் பிரச்னைகளைத் தாங்கிய கதைகள், ஹாஸ்யக்கட்டுரைகள், அறிவூட்டும் கட்டுரைகள், பாட்டுகள், விடுகதைகள், விகடத்துணுக்குகள் எதுவாயினும் காகிதத்தின் ஒரே பக்கத்தில் தெளிவாக எழுதியனுப்புக. 'ஆனந்தோதயத்'தில் நாலு பக்கங்களுக்கு மேற்படாமலிருப்பது நல்லது. காகிதத்தின் இருபக்கங்களும் எழுதியனுப்பப்படும் கட்டுரைகள் கவனிக்கப்படமாட்டா. கட்டுரையுடன் கடிதம் அவசியமில்லை. பிரசுரமாகாத கட்டுரைகளைத் திரும்பப் பெற விரும்புவோர் போதிய தபால் தலை உடன் அனுப்பவேண்டும்.

—ஆ-ர்

'ஆனந்தோதயம்', தபால் பெட்டி 372, சென்னை-2.

'ANANDODAYAM' (B. & C. Mills House Magazine)
Post Box 372. MADRAS-2.



கர்னாடிக் மில் கிராம ஆண்டுவிழா நிகழ்ச்சி சம்பந்தமான அநேக படங்களைச் சென்ற இதழில் கண்டீர்களல்லவா? அந்தக் கிராம வாலிபர் சங்கத்தின் பிரதான அங்கத்தினர்களை இந்தப் படத்தில் பார்க்கலாம். விழாவுக்குத் தலைமை தாங்கிய மானேஜர் திரு. ஜோன்ஸ் அவர்களும், வேல்பேர் ஆபீஸர் திரு. நம்பியார் அவர்களும் மத்தியில் வீற்றிருக்கிறார்கள்.

மனைத்தலைவிக்கு ஒரு வார்த்தை

'இல்லாள் அகத்திருக்க இல்லாதது ஒன்றில்லை' என்பது பழந் தமிழ் மொழி. வீட்டில் மனைவி இருந்தால் அந்த வீட்டில் இல்லாதது என்பதே இல்லை என்று பொருள் தருகிறது இம்மொழி. அதாவது ஒரு வீட்டிலே எந்தப் பொருள் இருந்தாலும், எது இல்லாவிட்டாலும் வீட்டை அழகுறச் செய்யும் இல்லாளாகிய மனைவி மாத்திரம் இருந்துவிட்டால் போதும்; மற்றவை அனைத்தும் இருப்பதற்கு ஒப்பாகும் என்கிற கருத்து உண்டாகிறது.

இந்தக் கருத்து மிகவும் அழகான கருத்து. வாழ்வுக்கு ஒளிதரும் விளக்கு தான் மனைவி. ஆண் பெண் ஒன்றி வாழும் பண்பு பிறந்த பண்டைக்காலத்திலிருந்தே இல்லாளின் முக்யத்துவம் எல்லோருக்கும் தெரிந்த விஷயமாகும். அத்தகைய கௌரவம் வாய்ந்த மனைவிமார்கள் தங்களுக்கு உரித்தான பெருமையை இன்று முற்றிலும் பெற்றிருக்கிறார்களா? அதைக் காப்பாற்றிவருகிறார்களா? இல்வாழ்க்கையில் இன்பம் என்றும் பரிமளிப்பதற்கான நற் செய்கைகளை இன்று இல்லக்கிழத்திகள் ஒழுங்காக மேற்கொண்டு வாழ்க்கையை அழகுடையதாகச் செய்து வருகிறார்களா? இந்தப் பிரச்னையை இங்கே சற்று ஆராய்வோம்.

மக்கள் நலன்களுக்கு மிக மிக இன்றியமையாத பிரச்னை இது. முக்கியமாக தொழிலிலோ, விவசாயத்திலோ ஈடுபட்டுள்ள பெருங்குடி மக்களின் அன்றாடப் பிரச்னைகளில் அதிமுக்யமானதும் இதுதான். இந்தப் பிரச்னையை ஒழுங்காகத் தீர்த்துக் கொண்டால் ஒவ்வொரு குடும்பஸ்தரின் வாழ்விலும் புதிய இன்பம் பிறக்கும். வாழ்வு இனிதாக அமைவுறும். வயலிலிருந்தோ, ஆலையிலிருந்தோ, பட்டறையிலிருந்தோ, பஜாரிலிருந்தோ, நாள் முழுதும் உழைத்த களைப்புடன் வீடு திரும்புகிறார் தொழிலாளி. அவரைப் புன் சிரிப்புடன் வரவேற்று உபசரித்து இனிய வார்த்தைகள் பேசும் மனையாள் இங்கிதம் தெரிந்தவள்; வாழும் வகை உணர்ந்தவள். களைப்புடன் திரும்பும் கணவனைக் கண்டதுமே குறைபாடுகளையும், முறையீடுகளையும் சரமாரியாகப் பொழிந்து தள்ளும் மனையாட்டியினால் அந்தத் தொழிலாளிக்குத் தொல்லைதான் அதிகமாகிறது.

நம் பெண்மணிகளில் பெரும்பாலோர் இங்கிதம் தெரிந்தவர்கள்; அன்பு மிக்க மனைவியர்களாகவும், பாசம் நிறைந்த தாய்மார்களாகவும், ஆதரவுள்ள சகோதரிகளாகவும் விளங்குபவர்கள். அத்தகைய சிறப்புமிக்க மாதர்கள் செழித்த நம் பாரத சமுதாயத்தைப் பற்றி நம் எல்லோருக்குமே பெருமைதான். ஆனால் ஒரு சில பெண்மணிகள் தங்கள் அறியாமையினாலோ, ஆணவத்தினாலோ, தமக்கே உரித்தான ஒருவித தீக்குணத்தினாலோ நல்வாழ்வு வாழ முடியாமல் தங்கள் சுகத்தையும் கெடுத்துக்கொண்டு. தங்கள் கணவன்மார்களின் வாழ்க்கையையும் நரகமாக்கி விடுகிறார்கள்.

ஒரு உதாரணம் காட்டுகிறோம், ஒரு சமயம் தொழில் மக்கள் வாழும் பிரதேசம் ஒன்றைப் பார்வையிடும் வாய்ப்புக் கிடைத்தது. மக்கள் தங்கள் சக்திக்குத் தக்கவாறு கூடியமட்டில் நல்வாழ்வு வாழ்ந்துவரும் இடம்தான் அது. அந்த வட்டாரத்தைச் சுற்றி வரும்போது ஒரு வீட்டுக்குள்ளிருந்து இறைச்சல் கேட்டது. கவனித்துக் கேட்டதில் கணவன் மனைவியருக்குள் தர்க்கம் என்று தெரியவந்தது. அப்போதுதான் வேலையிலிருந்து திரும்பிய கணவனிடம் மனைவி யாரைப்பற்றியோ புகார் கூறி இறைந்து கொண்டிருந்தாள்.

விசாரித்துப் பார்த்தபோது எதிர்வீட்டுக் குழந்தைக்கும் தன் குழந்தைக்கும் இடையே உண்டான குழந்தைச் சண்டையைத் தான் அந்த இல்லாள் அத்தனை பெரி தாக்கிப் புகார் பண்ணினுள் என்று தெரிய வந்தது.

அந்தத் தொழிலாளி நல்ல அறிவாளி. கொஞ்சம் படித்தவர் என்றும் தெரிகிறது. ஞானி டால்ஸ்டாய் எழுதிய குழந்தைச் சண்டை சம்பந்தமான கதையை அவர் படித்திருக்கிறுர். அதை உதாரணம் காட்டித் தம் மனைவியைச் சமாதானப்படுத்தி விட்டு வெளியே வந்தார். அவரிடமிருந்து தான் நமக்குத் தகவல் தெரியவந்தது. அந்தத் தொழிலாளி எதிர்வீட்டாருக்கும் தம் வீட்டாருக்கும் இடையே மூளவிருந்த பகைமையைத் தமது அறிவினுல் தடுத்து விரட்டினுர். தமது மனைவியை இசைவான மொழிகளால் தேற்றி அவள் தவறைச் சுட்டிக்காட்டித் திருத்தினுர். ஆனுல் அவரைப்போல அறிவும் அமைதியும் கொண்டவராக எல்லா மக்களும் இருநததுவிட்டால் வாழ்க்கை கற்கண்டாக ஆகிவிடுமே !

அந்த மனிதர் தம் மனைவி பேச்சைக் கேட்டு எதிர்வீட்டுக்காரர்களுடன் சண்டைக்குப்போயிருந்தால் என்ன ஆகும் ? என்ன ஆகும் என்பது சொல்லித் தெரியவேண்டிய விஷயமல்ல. இன்று பல வீடுகளில் அமைதிக்குறைவும், மனஸ்தாபமும், பகைமையும், பூசல்களும் இருந்து வருவதை மக்கள் அறிவர். அவற்றிற்கெல்லாம் பெரும்பாலும் வீட்டுத்தலைவியாகிய மனைவியே காரணமாக விளங்குவதை எண்ணிப்பார்க்கும்போது மக்கள் உள்ளம் துயருறவே செய்யும்.

ஆகவே மனைவிமார்களுக்கு ஒரு வேண்டுகோள் விடுப்பதும் அவசியமாகிறது. "தொழிலிலிருந்தோ, வயலிலிருந்தோ வீடு திரும்பும் உங்கள் கணவன்மார்களுக்கு நல்வரவேற்பு அளியுங்கள். உடல் சோர்ந்து வீடு திரும்பும் உழைப்பாளி மக்களது உள்ளம் குளிரப் பேசுங்கள். களைப்பு தீரக் 'கஞ்சி' கொடுங்கள். அன்பு மொழி பேசி அவர்களுக்கு ஆனந்தம் அளியுங்கள். வந்ததும் வராததுமாக உங்கள் குறைகளையும், இல்லாக்குறை, பொல்லாக்குறைகளையும் சொல்லி அவர்களுக்குத் துன்பம் அளிக்காமல் பார்த்துக்கொள்வது உங்கள் கடமையாகும். உடல் சோர்ந்துவரும்போது உள்ளம் நோகப்பேசினுல், ஆத்திரம் தான் ஏற்படுமோ, அனர்த்தம்தான் விளையுமோ ? ஆகவே வாழ்க்கையில் இன்பம் வேண்டுமானுல், இல்லத்தலைவிகளாகிய உங்கள் வாக்கினிலே இன்பம் திகழவேண்டும். இதை என்றும் மறவாதீர்கள் !"

இந்த வேண்டுகோளுடன் நிறுத்திவிடப் போவதில்லை. இன்னுென்றும் சொல்லுகிறேம். மனைத்தலைவிகளாயிருப்பவர்கள் தங்கள் வாழும் மனைகளையும், குழந்தை குட்டிகளையும் கூடியமட்டில் கவர்ச்சிகரமாக வைத்துக்கொள்ளவேண்டும். வீடு திரும்பும் கணவன் தன் வாழுமிடம் சுத்தமாகவும் ஒழுங்காகவும் இருப்பதைக் கண்டு மன நிம்மதி பெறவேண்டும். குழந்தைகள் கூடிய மட்டில் நல்ல முறையில் வளர்க்கப்பட்டு வருவதைக் கண்டு மகிழவேண்டும். வீடும் குழந்தைகளும் அழகுற விளங்குவதற்குப் போதிய வசதிகள் வேண்டுமே என்று கேட்கலாம். கிடைத்துள்ள வசதிகளைக்கொண்டு ஒழுங்கை ஏற்படுத்திக் கொள்ளப் பழகிக்கொண்டால் மேற்பட்டு வசதிகள் இடைக்கும்போது வாழ்வை மேலும் உன்னதமாக ஆக்கிக்கொள்ளலாமல்லவா ?

உடல் சோர்ந்து திரும்பும் உழைப்பாளி மக்களுக்கு வீட்டிலே வாழ்க்கை இனிதாக இருந்தால் அவர்களது சோர்வு நீங்கும். மீண்டும் வேலைக்குச் செல்லும்போது உடலும், உள்ளமும் உற்சாகத்துடன் இருக்கும். வேலையில் தெம்பிருந்தால் பலனும் நன்றுயிருக்கும். பலன் உயர உயர, பாட்டாளியும் உயர வழியுண்டு.

தொழில் உலகம்

ஆசிய நாடுகளுக்குக் கல்வி, விஞ்ஞான படிப்பிற்கான சாதனங்களை வாங்க வியாபாரக் கடன் வசதிகளை அமெரிக்காவும் வேறு பத்து ஐரோப்பிய நாடுகளும் சேர்ந்து செய்து கொடுக்க வேண்டுமென்ற திட்டத்தை ஐ.நா. கல்வி, விஞ்ஞான, கலாச்சார ஸ்தாபனம் கொண்டு வந்திருக்கிறது. திட்டம் குறிப்பிடும் 11 நாடுகள் ஆஸ்திரியா, பெல்ஜியம், டென்மார்க், பிரான்ஸ், இத்தாலி, நெதர்லண்ட்ஸ், நார்வே, ஸ்வீடன் சுவிட்சர்லாந்து, பிரிட்டன், அமெரிக்கா ஆகும்.

வெளி நாட்டு நாணய மாற்றுக் குறைவினால் விஞ்ஞான சாதனங்கள், பிலிம்கள், சினிமாக் கருவிகள், படங்கள் ஆகியவற்றை வாங்க முடியாத நிலையிலிருக்கும் ஆசிய நாடுகளுக்காக இந்தக் கடன் உபயோகிக்கப்படும்.

“ஆசியா, தூரகிழக்கு நாடுகளுக்கான இந்தத் திட்டம் அளவில் சிறியதானாலும் தொழில் நுணுக்க உதவித் திட்டத்தின் முக்கியமான பகுதியாகக் கருதப்படுகிறது” என்று ஐ.நா. கல்வி, விஞ்ஞான, கலாச்சார ஸ்தாபனத்தின் டைரக்டர் ஜெனரல் ஜேம் டாரஸ் போதத் கூறினார்.

“இந்தத் திட்டத்தின் கீழ் சில ஸ்தாபனங்களுக்கு முக்கியமான கல்வி, விஞ்ஞான சாதனங்கள் வரவழைத்துக் கொடுக்கப்படும்; பிறகு பல்வேறு தொழில் நுணுக்கத் திட்டத்தின் கீழ் பலருக்குப் பயிற்சி அளித்து உதவும்படி இந்த ஸ்தாபனங்கள் கோரப்படும்.”

ஐ.நா. ஆசியா-தூரக்கிழக்குப் பொருளாதாரக் கமிஷன், ஐ.நா. கல்வி, விஞ்ஞான, கலாச்சார ஸ்தாபனம் இவைகளினால் நியமிக்கப்பட்ட கூட்டு வேலை ஸ்தாபனத்தினால் இந்தத் திட்டம் உருவாக்கப்பட்டது.

* * *

நூற்றுக்கு எழுபத்தைந்து பேர் பெண்களாக உள்ள சர்வதேச மாதர் உடைத் தொழிலாளர் சங்கம் தொழிலாளர்களின் அறிவு வளர்ச்சிக்கு விரிவான சட்ட திட்டங்கள் மூலம் பாடுபடுகிறது. அதற்காக அவர்கள் கல்வி இலாகா என்றே ஒரு தனிக் கழகத்தை அமைத்திருக்கிறார்கள். 1917 முதல் இதன் கல்வித் திட்டம் நன்கு திறமையோடு அமல் நடத்தப்படுகிறது.

தொழிலாளர்களுக்கு நல்ல கருத்துக்களும், விரும்பத்தக்க பொழுது போக்கு வசதிகளும் அளித்து அவர்களை நல்ல தொழிற்சங்கத் தலைவர்களாகவும் சோம்பியிராத நல்ல பிரஜைகளாகவும் ஆக்குவதே சங்கத்தின் கல்வி இலாகா நடத்தும் திட்டங்களின் நோக்கமாகும்.

இன்று மொத்தம் 4,30,000 அங்கத்தினர்கள் கொண்ட இச்சங்கத்தை ஒரு ஐக்கிய நாடுகள் சங்கம் என்றே சொல்லலாம். பற்பல இனத்தைச் சேர்ந்தவர்களும் முதலில் அமெரிக்காவுக்குப் பற்பல நாடுகளிலிருந்து வந்தவர்களும் இச்சங்கத்தில் அங்கம் வகிக்கிறார்கள்.

தொழிலாளர்களின் நலம் வளரச் சங்கம் பாடுபடுவதைக் காணலாம். வருஷந்தோறும் $2\frac{1}{2}$ கோடி முதல் 3 கோடி டாலர் வரை, சங்கம் தன் அங்கத்தினரிடமிருந்து வசூலிக்கிறது. இத்தொகையைக்கொண்டு அவர்களுக்குச் சம்பளத்துடன் விடுமுறை கிடைக்கச் செய்கிறார்கள்; வேலையிலிருந்து முதுமையால் நீங்குபவர்களுக்குப் பண உதவி அளிக்கிறார்கள்; வேனில் காலத்தில் வெளியே வசதியுள்ள இடத்துக்குச் சென்று பலர் சேர்ந்து வாழ வசதி செய்து கொடுக்கிறார்கள்; பற்பல இடங்களிலும் பற்பல துறைகளிலும் தொழிலாளர்களுக்கு வைத்திய உதவி அளிக்கிறார்கள். மேலும், கல்வி, பொழுது போக்கு, பண்பாடு இவற்றில் சங்கத் தொழிலாளர்கள் பயிற்சியும் வசதியும் பெற அத்தொகை பயன் படுகிறது.

சங்கம் நடத்தும் இக் கல்வித் திட்டம் அங்கத்தினர்களுக்கு மொத்தத்தில் சில வசதிகளையும், பாட வகுப்புகளையும், தொழிற்சங்கச் சேவைக்கு உரிய பயிற்சியையும் அளிக்கிறது.

அமெரிக்க தொழிற்சங்க சமஷ்டியின் தலைவர் வில்லியம் கிரீன் என்பவர் இவர் தான். யுனைடெட் ஸ்டேட்ஸில் உள்ள பெரிய தொழிற் சங்கங்களில் ஒன்றாகிய இதன் ஸ்தாபகர்தான் ஸாமுயல் கோம்பர்ஸ். அவரது நூற்றாண்டு விழாவைத்தான் அமெரிக்கா அமோகமாகக் கொண்டாடியது.

மொத்தத்தில் அளிக்கப்படும் கல்வி, கலாச்சார, பொழுது போக்கு வசதிகளாவன :—அறிவு வளர்ச்சிக்கான கூட்டம், சொற்பொழிவு, ஆண்டுவிழாக் கொண்டாட்டம், மகாநாடு, நாடகம், உல்லாஸப் பயணம், நூல் நிலையம் பொருந்திய பொழுது போக்கிடம், வீட்டில் அமர்ந்து ஆடும் விளையாட்டுக்கள், விருந்து, சினிமா, ரேடியோப் பேச்சு, சங்கீதக் கச்சேரி, நாட்டியம், பந்தெறி விளையாட்டுப் போட்டிகள் முதலியவை.

பாட வகுப்புகளில் தொழிலாளர்களுக்குச் சங்கம் முக்கியமாக சமூக அறிவு நூல்களில் பயிற்சி அளிக்கிறது. பொருளாதாரம், சமூக மன இயல்பு, ஆலைத்தொழில் வரலாறு ஆகியவற்றிலும், அவற்றைச் செயல் முறையில் புரிந்துகொள்வதற்காகச் செய்தி விளக்கங்களும் தொழிலாளர்களுக்குக் கற்றுக்கொடுக்கப் படுகின்றன.

மூன்றாவதான முக்கிய சேவை, தொழிலாளர்கள் தங்கள் உரிமைகளையும் தங்கள் கடமைகளையும் நன்கு உணரக் கற்றுக் கொடுப்பதாகும். ஒவ்வொரு தொழிலாளியும், முழுநேர வகுப்புகளிலோ, சில வேளை வகுப்புகளிலோ பொறுப்புணர்ந்த சங்கத்தவராவதற்கான இத்தகைய பயிற்சி பெற வேண்டும்.

இவ்வகை முயற்சிகளால் தொழிலாளர்களின் வாழ்வில் சுவை ஊறுகிறது ; புதுப் புதுக் கருத்துக்கள் உதிக்கின்றன. வெறும் சோற்றினால் வாழ்வது வாழ்வல்ல என்பது புரிகிறது.

*   *   *

இந்தோனேஷியாவின் கிராம வாழ்க்கையில் பொருளாதார முன்னேற்றம் காண அங்கு குடிசைக் கைத்தொழில்களை வளர்ப்பதற்காக, கே. நாகராஜ ராவ் என்ற இந்திய எஞ்சினியர் அமெரிக்க அரசாங்கத்தின் பொருளாதாரக் கூட்டுறவு நிர்வாகத்தால் தேர்ந்தெடுக்கப்பட்டு இந்தோனேஷியா சென்றிருக்கிறார்.

கே. நாகராஜ ராவ் பெங்களூரில் பிறந்தவர். மைசூர்ப் பல்கலைக் கழகத்தில் பி.ஏ., எம்.ஏ. பட்டங்கள் பெற்றவர். பின்னர் 25-வது வயதில் அமெரிக்கா சென்று சிக்காகோவில் இரசாயன எஞ்சினியராகத் தேர்ச்சிபெற்றார். இவருக்கு இப்பொழுது வயது முப்பது.

“ ஆசியாவில் பிறந்த நான், ஆசிய நாட்டு மக்களின் வாழ்க்கை நிலையை உயர்த்தவும், ஜனநாயகக் கொள்கைகளை அவர்களிடம் ஆழமாகப் பதியச் செய்யவும் மிக மிக ஆசைப்படுகிறேன் ” என்பது நாகராஜ ராவ் வாஷிங்டனை விட்டு இந்தோனேஷியாவுக்குச் செல்லும்போது சொன்ன வார்த்தை.

இந்தோனேஷியாவில் ஆறு மாதகாலம் இருப்பார். இருந்து இங்கு குடிசைக் கைத்தொழில்களும் சிறிய இயந்திர சாலைகளும் அமைக்க ஒரு திட்டம் வகுத்துக் கொடுப்பார். திட்டம் தொழில் நுணுக்கப் பயிற்சி பற்றி விரிவாக இருக்கும்.

முக்கியமாக கே. நாகராஜ ராவின் கவனம் உணவுப் பொருள்களைக் கெட்டுப்போகாமல் நீண்ட நாள் சேமித்து வைப்பதில் செல்லும். இந்தத் துறையில் அவர் நிபுணர். உணவுப் பொருள்கள் கெடாமல் காப்பது பற்றி அவர் எழுதியுள்ள ஆராய்ச்சிக் கட்டுரை ஒன்றை அமெரிக்க இரசாயனச் சங்கத்தார் வெளியிடப்போகிறார்கள்.

*   *   *

மார்பு, தொண்டை, தோல், உதரம் ஆகியவைகளில் புற்று நோய் வந்தால், அதன் ஆரம்பத்திலேயே சிகிச்சை செய்வதன் மூலம் அநேகமாகப் பூரண குணம் காணலாம் என நியூயார்க் நகர ஞாபகார்த்த ஆஸ்பத்திரியின் டாக்டர் ஆர்தர் ஸதர்லண்ட் கூறுகிறார்.

தொழிலாளர்கள் வெட்டுவதற்கு உபயோகிக்கும் கருவிகளில் ஏதாவது வெடிப்பு விட்டிருக்கிறதா என்பதைக் கண்டுபிடிக்க நுட்பமான ஒரு புது வழியை கலிபோர்னியாவிலுள்ள டை செக் கார்ப்பரேஷன் இப்பொழுது கையாண்டு வருகிறது.

பொதுவாக வெட்டுக் கருவிகளின் முனையிலுள்ள வெடிப்புகள் தொழிலாளர்களுக்குத் தெரிவது இல்லை. இதனால், வேலை செய்யும்போது கருவியின் முனை அதிவேகமாக நொறுங்கித் தூள் தூளாகப் பறந்து வேலை செய்வோருக்குத் தீங்கு செய்வது உண்டு.

எனவே, கருவிகளை உபயோகத்துக்குக் கொடுப்பதற்கு முன் அதைச் சோதித்துப் பார்க்க இப்பொழுது கண்டு பிடிக்கப்பட்டுள்ள புது வழி மிகவும் பயன்படுகிறது.

முதலில் கருவியின் முனையைச் சுத்தப்படுத்தும் ஒரு திரவத்தில் தோய்த்தெடுக்கிறார்கள் ; பின் வெடிப்புகளுக்குள் நுழைந்து பரவக்கூடிய ஒரு சிவப்பு நிறச் சாயத்தில் கருவியைத் தோய்க்கிறார்கள். இந்தச் சாயம் காய்ந்தவுடன், இன்னொரு திரவத்தில் கருவியைத் தோய்த்தெடுக்கவே, உள்ளே நுழைந்த சாயம் தவிர வெளியே ஒட்டிய சாயம் எல்லாம் கழுவப்படுகிறது. நுழைந்த சிவந்த சாயம் அப்படியே கோடு வரைந்தாற்போல் வெடிப்பு முழுவதையும் நன்கு காட்டுகிறது. இவ்விதம் வெடிப்பு இருப்பதைச் சோதித்து அறிய ஒரு சில நிமிஷங்களே ஆகின்றன.

* * *

பிரிட்டன் திருவிழாவின் மைய ஸ்தலமாக விளங்கும் தென்கரை கண்காட்சி பிரதி தினமும் பல்லாயிரக் கணக்கானவர்களை ஆகர்ஷித்துவருகிறது. இத்திருவிழாக் கண்காட்சியைக் காண அயல் நாடுகளிலிருந்து வருபவர்களுள் இந்தியப் பிரமுகர்கள்தான் அதிகமாக இருக்கிறார்கள்.

பாரிஸில் யுனெஸ்கோ மகா நாட்டிற்குச் செல்லுவதற்கு முன் பிரிட்டனில் குறுகிய காலம் தங்க வந்துள்ள இந்தியக் கல்வி மந்திரி மௌலானா ஆஜாத் ஜூன் மாதம் 5-ந்தேதியன்று கண்காட்சியைப் பார்க்கச் சென்றார். அவருடன்கூட இந்தியா ஆபீஸ் சீனியர் உத்தியோகஸ்தர்களும் வந்திருந்தனர்.

மௌலானா ஆஜாதுக்கு பலவகையான அவசர அலுவல்கள் இருக்கிறபடியால் தமக்கு கிடைத்த சிறிது ஓய்வு நேரத்தில் என்ன என்ன பார்க்கவேண்டுமென்று முன்கூட்டியே திட்டமிட்டுக்கொண்டுதான் கண்காட்சிக்கு வந்ததும் நேராக "புதுப் பள்ளிகள்" மண்டபத்திற்கு போனார்.

இந்தப் 'புதுப்பள்ளிகள்' மண்டபத்தில் பள்ளிக்கூட அறைகளுக்குகந்த மரச்சாமான்கள், கல்வி புகட்டும் சாதனங்கள், சிறுவர்கள் சிறந்த முறையில் கல்வி கற்கத் தகுந்த சூழ்நிலைகள் முதலியன ஆதர்சிக்கப்பெற்றுள்ளன. மண்டபம் உள்ளே நுழைந்ததும் ஒரு பெரிய வகுப்பு அறையையும், குழந்தைகளுக்கான ஒரு வகுப்பு அறையையும் இந்தியக் கல்வி மந்திரி முதலில் பார்த்தார்.

பிறகு மௌலானா ஆஜாத் ஐந்து சிறிய புகைப்பட விளக்கங்களை பார்வையிட்டார். இவை ஆரம்பப் பள்ளிப்படிப்பைப் பற்றிய பல அம்சங்களை விளக்குபவையாகும். ஸெகண்டரி கல்விப்பகுதியில் கலை, விஞ்ஞானம், தொழில் நுணுக்கம் முதலிய பாட திட்டங்களை விளக்கும் நான்கு சிறிய விளக்கப் படங்களையும் பார்த்தார்.

கல்வி மண்டபத்தை விரிவாக இரண்டு மணி நேரம் சுற்றிப் பார்த்துவிட்டு, "புதுப் பள்ளிகள்" மண்டபம் வெகு நேர்த்தியாக இருந்ததுடன் பள்ளிப்படிப்புக்கோர் அறி



உணவுக்கு அடுத்தபடியாக மக்களுக்குத் தேவையாயிருப்பது உடை. உடை தயாரிப்பில் ஈடுபட்டுள்ள ஜவுளி மில்கள் நாட்டின் பெரிய பற்றுக்குறை ஒன்றைச் சமாளிக்கும் மகத்தான காரியத்தில் ஈடுபட்டுள்ளன.

அமெரிக்க கோதுமை இந்தியாவுக்கு வரும் காட்சி. ஒரு அமெரிக்க விவசாயி இந்திய ஸ்தானிகர் ஸ்ரீமதி விஜயலக்ஷ்மியிடம் கோதுமை அளிப்பதைப் படம் சித்திரிக்கிறது.

வூட்டியாகவும் இருக்கிறது என பத்திரிகை நிருபர்களிடம் மௌலானா ஆஜாத் தெரிவித்தார்.

*　　*　　*

பிரிட்டனிலுள்ள தொழிலாளர் யூனியன்கள் காங்கிரஸும், பிரிட்டிஷ் கவுன்ஸில் என்ற கலாசார ஸ்தாபனமும் சேர்ந்து விடுத்துள்ள அழைப்பிற்கு இணங்கி நான்கு இந்திய தொழிற்சங்க வாதிகளும், ஒரு பாகிஸ்தானி தொழிற்சங்க தலைவரும் பிரிட்டனுக்கு விஜயம் செய்திருக்கின்றனர். இவர்கள் சுமார் நாலுமாதகாலம் பிரிட்டனில் சுற்றுப்பிரயாணம் செய்து அங்குள்ள தொழிலாளர் யூனியன்களையும் ஸ்தல ஸ்தாபன நிர்வாக முறைகளையும் ஆராய்ந்தறிவர். பிரிட்டன் சென்றுள்ள இந்தியர்கள் வருமாறு: இந்திய தேசிய தொழிலாளர் யூனியன் காங்கிரசைச் சேர்ந்த ஸ்ரீ சுமந்து தேசாய், கே. முகர்ஜி, ஹிந்த் மஜ்தூர் சபையைச் சேர்ந்த ஸ்ரீ நாராயண சிங், பி. காண்டகோர், அகில பாகிஸ்தான் தொழிலாளர் சம்மேளனத்தைச் சேர்ந்த ஸ்ரீ எம். சுலைமான்.

*　　*　　*

பிரிட்டிஷ் தேசிய திருவிழாவின் ஒரு அம்சமாக லண்டனில் தற்போது ஒரு நூதன கண்காட்சி நடைபெற்றுவருகிறது. இக்கண்காட்சியில் 5,000 வருடங்களுக்கு முன்பு எழுதுவதற்கு உபயோகிக்கப்பட்ட மெல்லிய மரக் கொம்புகளிலிருந்து இன்று நாம் உபயோகித்துவரும் நவீன பேனா செட்டுகள் வரை இடம் பெற்றுள்ளன. இங்கு சுமார் 150 விதமான சாமான்கள் காட்டப்படுகின்றன. இப்பேனாக்கள் இனத்தையும் மிஸ்டர் வில்லியம் பிஷப் என்பவர் பல நாடுகள் சென்று தேடி சேமித்தவையாகும். நல்ல வான்கோழி, அன்னம், வாத்து முதலியவைகளின் இறகுகளிலிருந்து தயாரிக்கப்பட்ட பழைய காலத்து இறகு பேனாக்கள், பிளாட்டோ, ஓவிட் போன்ற மஹான்களின் காலத்தில் எழுத்தாணிகள் மற்றும் பல இதர விசித்திரமான பேனா வகைகளை இக்கண்காட்சியில் காணலாம்.

*　　*　　*

தாவர பாதுகாப்பு பிரச்னைகளைப் பற்றி விவாதிப்பதற்காக ஜூன் 26உ—29உ வரை இங்கிலாந்தில் ஒரு சர்வதேச மகாநாடு நடைபெற்றதாம். இம் மகாநாட்டிற்கு இந்தியா, சிலோன் உட்பட 40-க்கு மேலான நாடுகளிலிருந்து பிரதிநிதிகள் சென்றனராம். புது டில்லியிலுள்ள விவசாய ஆராய்ச்சி கூட்டத்தைச் சேர்ந்த டாக்டர் ஆர். எஸ். வாசுதேவாவும், ஐ.ஸி.ஐ.-யின் கல்கத்தா பிரிவைச் சேர்ந்த மிஸ்டர் பி. லெஸ்வேரும், சென்னைப் பிரிவைச் சேர்ந்த ஆர். கோல்மானும், பம்பாய் பிரிவைச் சேர்ந்த எப். பி. கம்பாட்டாவும், பூனா விவசாய கல்லூரியை சேர்ந்த ஸ்ரீ பி. ஸி. உப்பாலும் இம்மகாநாட்டிற்கு வரும்படி அழைக்கப்பட்டுள்ளனர். பிரபல பிரிட்டிஷ் விவசாய விஞ்ஞானியான ஸர். ஜான் ரஸ்ஸல் "வீணாகும் உலக உணவுப் பொருள்" என்பதுபற்றி இக்கூட்டத்தில் பேசினாராம்.

*　　*　　*

விவசாயமல்லாத தொழில்களின் உழைக்கும் அமெரிக்க ஸ்திரீகள் எண்ணிக்கை 1951-ம் ஆண்டில் ஆரம்பத்தில் 1,74,90,000. சென்ற 1950-ல், முன்னர் இருந்ததைவிட 10 லக்ஷம் அதிக ஸ்திரீகள் வேலை பார்க்க முனைந்தார்கள்.

*　　*　　*

அமெரிக்காவில் தொழிலாளர் ஸ்தாபனங்கள் வெளியிடும் பத்திரிகைகள் மட்டும் 700-லிருந்து 800 வரை இருக்கின்றன.

அமெரிக்காவில் பசிபிக் கடற்கரையை யடுத்து வடமேற்காக இருக்கும் வாஷிங்டன் ராஜாங்கத்தில் கிராண்ட் கூலி அணைக்குப் பின்னால் உள்ள ரூஸ்வெல்ட் ஏரியிலிருந்து தண்ணீரை இறைத்துக் கொலம்பியா ஆற்றுத் தீரங்களில் விவசாயத்துக்காக நீர்ப்பாசன வசதிகள் செய்து கொடுக்கிறார்கள். இத்திட்டம் வரப்போகும் சாகுபடிக் காலத்தில் ஆரம்பிக்க இருக்கிறது.

கொரியாவில் உணவுத்தட்டைச் சமாளிக்கும் படம். கஷ்டப்படும் மக்களுக்குக் 'கஞ்சி' வினியோகம் இப்படி நடைபெற்றதாம்.

கான்கிரீட்டினால் கட்டப்பட்ட அணைகளில் உலகிலேயே பெரியதான கிராண்ட் கூலி அணை கொலம்பியா ஆற்றின் குறுக்கே கட்டியதாகும். இதனால் தடுக்கப்பட்டுத் தேங்கிய நீர், இப்பொழுது சராசரி ஒவ்வொன்றும் 87 எக்கர் பரப்புள்ள 1,000 பண்ணை நிலங்களுக்குக் கால்வாய்கள், குழாய்கள், கிடங்குகள், முதலியவற்றின் வழியாகச் சென்று சாகுபடிக்குப் பயனாகும். கொலம்பியா தீரத்தில் இன்னும் பயிருக்கு வராத நிலத்தின் அளவு மொத்தம் 10 லட்சம் எக்கராகும். இப்பொழுது ஆரம்பித்திருக்கும் நிலமீட்சித் திட்டத்தின்படி நாளடைவில் இந்தப் பத்து லட்சம் எக்கரும் சாகுபடிக்கு வந்து சேரும். அப்பொழுது அமெரிக்க வரலாற்றிலேயே இதுதான் மிகப் பெரிய நிலமீட்சித் திட்டமாக விளங்கும்.

கிராண்ட் கூலி அணைக்குப் பின் உள்ள ரூஸ்வெல்ட் ஏரியிலிருந்து நீரை இறைப்பதற்காகப் பன்னிரண்டு இயந்திரங்களை அமைக்கப் போகிறார்கள். இவற்றில் ஒன்று ஏற்கெனவே நீரிறைத்து வருகிறது.

நீரை இறைப்பதற்கு இயந்திரங்களுக்குப் பயன்படும் மின்சார சக்தி கிராண்ட் கூலி அணையிலுள்ள மின்சார உற்பத்தி சாலையிலிருந்து கிடைக்கும். இம் மின்சார உற்பத்திசாலை உலகிலேயே மிகப் பெரிது என்று சொல்லப்படுகிறது. இதில் இருக்கும் மின்சார உற்பத்தி இயந்திரங்கள் 18. இவற்றில் 16 இப்பொழுதே வேலை செய்து வருகின்றன. ரூஸ்வெல்ட் ஏரியிலிருந்து நீரை இறைத்து வேறோர் ஏரியில் தேக்கி வைப்பார்கள்; இங்கிருந்து நீர்ப்பாசனக் கால்வாய்கள், குழாய்கள் முதலியவற்றில் தண்ணீர் அளந்து விடப்படும்.

கொலம்பியா தீரத்தின் நீர்ப்பாசனத் திட்டம் முற்றுப் பெற்றால் ஆற்றின் கிழக்கிலும் மேற்கிலும் செல்லும் கால்வாய்களின் மொத்த நீளம் 4,000 மைல்களாகும். இதில் இப்பொழுது மொத்தம் 138 மைல் நீளமுள்ள முக்கிய கால்வாய்கள் அநேகமாக வெட்டி முடிந்துவிட்டன.

கொலம்பியா தீரத்தின் நிலமீட்சித் திட்டத்தில் சாகுபடியாகப்போகும் நிலத்தில் நூற்றுக்கு எண்பது தனிப்பட்டவர்களின் உடைமையில் உள்ளன. இவையும் அரசாங்கத்துக்குச் சொந்தமான நிலமும் மண்ணின் தன்மையைப் பொறுத்து 40, 50 எக்கர் அல்லது 160 எக்கர் கொண்ட பண்ணைகளாக வகுக்கப்பட்டுள்ளன.

அரசாங்க உடைமையிலுள்ள நிலம் சென்ற உலக யுத்தத்தில் ஈடுபட்ட படைவீரர்களுக்கு மட்டுமே பகிர்ந்து கொடுக்கப்பட்டுள்ளது. முதலில் பண்ணை வேலை தொடங்குவதன் கஷ்டங்களைப்பற்றி அவர்களுக்கு மூன்று நாட்கள் சொல்லிக் கொடுக்கப்பட்டது; பத்துப் பத்துப் பேர்களாக அவர்கள் இந்தச் சொற்பொழிவுகளைக் கேட்டார்கள்.

பண்ணைகளில் வேலை தொடங்குவதற்கு அரசாங்கத்தின் பண உதவி கடனாகக் கிடைக்கும்.

கச்சாப் பொருள் பிரச்னை

ஜான் கிங்ஸ்லே

கொரியாவில் யுத்தம் தொடங்கியிரா விட்டாலும், மேற்கத்திய நாடுகள் அவசர அவசரமாக தற்காப்பு ஆயுதங்களில் இறங்கி யிராவிட்டாலும் எப்படியும் கச்சாப்பொருள் நெருக்கடி தோன்றியிருக்கக்கூடும். இவ் வாறு நாம் ஐரோப்பாவுக்கென ஐ.நா. வின் பொருளாதார கமிஷனின் ஆராய்ச்சி பிரிவு தயாரித்துள்ள 1950-ம் வருட ஐரோப் பிய பொருளாதார சர்வேயிலிருந்து எளி தாக முடிவு செய்திருக்கலாம். ஏனெ னில் 1950-ம் வருடத்தில் ஐரோப்பாவிலும், பொதுவாக உலகம் முழுவதிலும் கைத் தொழில் உற்பத்தியானது கச்சாப்பொருள் உற்பத்தியைவிட பன் மடங்கு அதிகமாக விஸ்தரித்திருக்கிறது. இது எல்லாருக்கும் தெரிந்த விஷயம்தான்.

உற்பத்தி அதிகரிப்பு

சோவியத் யூனியன் தவிர்த்து ஐரோப் பாவில் 1949-ம் வருஷத்திலேயே கைத் தொழில் உற்பத்தி யுத்த முன்கால மட் டத்தைவிட 10 சதவிகிதம் அதிகரித்தது. 1950-ல் மேலும் உற்பத்தி 13 சதவிகிதம் பெருகி அவ்வருட கடைசி மூன்று மாதங் களில் 1938-ம் வருட அளவைவிட மூன் றில் ஒரு பங்குக்குமேல் போய்விட்டது. பரவ லாக உலகம் பூராவும் கைத்தொழில் உற் பத்தி 1950-ம் வருடத்தில் சுமார் 13 சத விகிதம் அதிகரித்திருக்கிறது.

ஆனால் இத்தகைய மஹத்தான உற் பத்தி பெருக்கத்திற்கு ஏற்றுப்போல் கச் சாப்பொருள்கள் கிடைக்கக்கூடிய அளவு அதிகரிக்கவில்லை. 1950-ம் வருடத்தில் உற்பத்தி பெருக்கம் பெரும்பாலும் சேமித்து வைத்திருந்த கச்சாப் பொருள்களைக் கொண்டே எய்தப்பட்டது.

இதற்கு இரண்டு உதாரணங்கள் கொடுக் கிறேன். ஐரோப்பாவில் நிலக்கரி உற் பத்தி 1950-ம் வருடத்தில் 3 சதவிகிதமே உயர்ந்திருக்கிறது. பிரதான உற்பத்தி நாடுகளாகிய பிரிட்டன், மேற்கு ஜெர்மனி—என்னதான் சுரங்கத்தொழிலாளிகளுக்கு மிகுந்த ஊக்கமளித்து வந்துள்ளபோதி லும்—யுத்த முற்காலத்தைவிட குறைந்த அளவில்தான் நிலக்கரி உற்பத்தி செய் கின்றன. 1950-ம் வருடத்தில் இரும்பு உற்பத்தி ஒரே ஒரு சதவிகிதம்தான் அதி கரித்திருக்கிறது!

மேற்கூறப்பட்ட உதாரணங்களிலுள்ள கச்சாப்பொருள்கள் ஐரோப்பா சுய-பூர்த்தி பெறும் வகையில் இருக்கின்றன.

உண்மையாக பார்க்குமிடத்து, கச்சாப் பொருள்கள் நிலைமையை சரிப்படுத்துவது ஐரோப்பிய நாடுகளின் சக்தியில் ஓரளவு தான் அடங்கியிருக்கிறது. மிகுந்த அளவு அமெரிக்காவின் தேவையை பொருத்திருக் கிறது. முன்னைவிட யுத்தத்திற்குப்பின் அமெரிக்காவின் கைத்தொழில் உற்பத்தி இரட்டிப்பாக அதிகரித்துள்ளது என ஐரோப் பிய பொருளாதார சர்வே எடுத்துக்காட்டு கிறது. 1950-ம் வருடத்தில் 20 சத விகிதம் உற்பத்தி உயர்ந்துள்ளதுடன் உலக உற்பத்தியில் அமெரிக்க உற்பத்தி மாத்தி ரம் 40 சதவிகிதம் இடம் பற்றியிருக்கிறது.

கைத்தொழில் தேவைக்குத் தக்கவாறு கச்சாப்பொருள் உற்பத்தி நடை போடாமல் பின்தங்கியுள்ளதுதான் உலக பணவீக்கத் திற்கு ஒரு முக்கிய காரணம். கடந்த வரு டத்தில் கச்சாப்பொருள் உற்பத்தி செய்யும் நாடுகள் அடைந்துள்ள கொள்ளை லாபங்கள் எங்கு கச்சாப்பொருள் சப்ளை நிலைமையை சிறப்பிக்க உபயோகிக்கப்படாது இருக்கப் போகின்றதோ என ஐரோப்பிய பொரு ளாதார சர்வே கவலை தெரிவிக்கிறது.

கச்சாப்பொருள் பற்றுக்குறையும், ஆயுத ஸ்வீகரணத்திற்கான அவசர தேவைகளும் சேர்ந்து அமெரிக்கா, பிரிட்டன், ஐரோப்பா முதலிய நாடுகளை கச்சாப்பொருள் உற் பத்தி செய்யும் நாடுகளுக்கு தேவைப்படும் மெஷினரி, யந்திர சாதனங்களை ஏற்றுமதி செய்யாது தடைப்படுத்தினால் அம்மூலப் பொருள் உற்பத்தி நாடுகளின் சம்பாதனை கள் பாதிக்கப்படும். இதனால் மேலும் கச் சாப்பொருள் விலைவாசிகள் உயரும் என் பதில் சந்தேகமில்லை—1950-ல் விலைகள் 80 சதவிகிதம் உயர்ந்திருக்கின்றன.

விவசாய உற்பத்தி

இந்த சந்தர்ப்பத்தில் ஐரோப்பிய விவ சாய உற்பத்தி கைத்தொழில் உற்பத்தியை விட வெகு குறைவாக விஸ்தரித்துள்ள தைப்பற்றி வருத்தத்துடன் குறிப்பிடவேண் டியதே. ஆனால் பிரிட்டனில் மட்டும் விவ சாய உற்பத்தி யுத்த முன்காலமட்டத்தை விட அதிகமாகவே உயர்ந்திருக்கிறது.

கொரியாவும் ஆயுத ஸ்வீகரணமும் இப் பிரச்னைகள் திடுமென்று நெருக்கடியில் கொண்டுவிட்டுள்ளன வென்றாலும் கச்சாப் பொருள், உணவு துறைகளில் கைத்தொ ழில் திறனுக்கேற்றவாறு முன்னேற்றப் படுத்தும் பிரச்னை உலகம் எதிர்நோக்கத் தான் செய்கிறது என்பது தெளிவு.

அமெரிக்காவில் 92,000 சிவில் விமா னங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன. இதில் 94 சத விகிதம் ஒரு என்ஜின் உள்ள விமானங்களாகும்.

குற்றவாளி

எஸ்.பி.ஹர்ஷின்

காலை மணி ஆறு இருக்கும்.

யாரோ ஒருவன் பிள்ளைவாளின் பங்களாவைச் சுற்றிச் சுற்றிப் பன்முறை நடந்து கொண்டிருந்தான். அவ்வப்போது பங்களாவை எட்டிப் பார்ப்பதும், உள்ளே நுழையலாமா வேண்டாமா நுழைந்தால் ஒரு வேளை அடித்து விரட்டிவிடுவாரா என்று எதை எதையோ யோசித்துக்கொண்டு நிற்பதுமாக கொஞ்ச நேரம் சென்றது. திடீரென்று அவன் தோளில் யாரோ கை போட்டு குலுக்கவே திரும்பிப் பார்த்தான் அவன்.

போலீஸ்காரன் !

“ என்ன அப்பா, இன்றைக்குக் காலையில் தானே சிறையை விட்டு வெளிப்பட்டாய். அதற்குள்ளாக இந்தப் பங்களாவை நோட்டம் பார்க்கிறாயே ! வெகு சீக்கிரத்திலேயே உன்னை மறுபடியும் ஜெயிலில் பார்க்கலாம் என்று சொல்லு ” என்று சொல்லிக் கொண்டே அவனைத் தட்டிக் கொடுத்தான்.

முனியனுக்குக் கோபம் வந்தது. ஆனால், அவன் போலீஸ்காரனை என்ன செய்துவிட முடியும் ! அவனோ சர்க்கார் உத்தியோகஸ்தன். இவனோ நான்கு பேர்களிடம் அவமானப்பட்டு திருட்டுக் குற்றம் சாட்டப்பட்டு சிறையில் நன்னடத்தைக்காக குறிப்பிட்ட காலத்திற்கு முன்னதாகவே வெளியில் அனுப்பப்பட்டவன். எனவே அவன் பல்லைக் கடித்துக்கொண்டு தன் கோபத்தை அடக்கிக்கொண்டான்.

“ இல்லே அண்ணே. இவரு தான் முந்தி எனக்கு எஜமானா இருந்தாரு. அவரைப் பார்த்துவிட்டுப் போகலாம் என்று தான் காத்துக் கிடக்கிறேன்,” என்றான் முனியன்.

“ என்னவோ அப்பா. நீ நல்லவனாகப் பிழைத்தால் சர்க்காருக்கும் லாபம். உனக்கும் நல்லது. பழைய தொழிலை எல்லாம் மறந்துவிடு ” என்றான் போலீஸ்காரன்.

முனியன் கண்களில் நீர் துளித்தது. நிரபராதியோ அன்றிக் குற்றவாளியோ ஒரு முறை குற்றம் சாட்டப்பட்டால் மறுபடி அவனை நல்லவனாக உலகம் மதிப்பதே இல்லை. அவன் என்றென்றைக்கும் குற்றவாளிதான் என்று முணு முணுத்தான் அவன்.

இதற்குள் பிள்ளைவாள் பங்களாவுக்கு வெளியே வந்தார். “ என்ன முனியா ஜெயிலிலிருந்து தப்பித்துக்கொண்டு வந்து விட்டாயா என்ன ? உனக்கு மூன்று வருஷம் தண்டனை விதிக்கவில்லையா ? நீ ஜெயிலுக்குப் போய் இரண்டு வருஷம் கூட ஆகவில்லையே ?”

“ அதிகாரிங்க மனசுபோல நடந்துகிட்டனும்; அதுக்காக சீக்கிரமாகவே விடுதலை செஞ்சுப்புட்டாங்க. நான் திருடன் இல்லைனு உங்க கிட்டயாவது சொல்லிப்புட்டா தான் மனசு நிம்மதிப்படும். அதனாலே தான் நேரே உங்க வீட்டுக்கு வந்தேன் ” என்றான் முனியன்.

பிள்ளைவாள் சிரித்தார். அந்தச் சிரிப்பிலே வருத்தம் தோய்ந்திருந்தது. “ நீ குற்றவாளியில்லை என்பது எனக்குத் தெரியும் முனியா. நீயும் நானும் ஒன்றாக எஜமானரிடம் வேலைக்குச் சேர்ந்தோம். ஆனால் நீ சர்க்காருக்கு விருந்தினனாகப் போனாய். எஜமானரின் மகளைக் கட்டிக் கொண்டதன் மூலம் அவருக்கே விருந்தாளி ஆய்விட்டேன். அதற்காக உன்னைப்பற்றி உண்மையாகத் தெரிஞ்ச நானும் உன்னைத் திருடன்னு சொல்லுவேனா ?

முனியன் வாயை அகலப் பிளந்தான். ஆனால் உங்களுக்கு எஜமானர் மகளைக் கட்டிக்கொடுக்கணும்னு அவருக்கு ரொம்ப

நாளாவே ஆசைதானுங்க. உங்க கிட்ட சொல்லலேயே தவிர எங்கிட்ட சொல்லி இருக்காரு பலமுறை" என்ருன் அவன்.

"இந்த விஷயத்தை நீ அப்பவே சொலலியிருந்தா நானும் அவ்வளவு முரட்டுத்தனமாக நடந்துகொண்டிருக்கமாட்டேன். நீயும் ஜயிலுக்குப் போகவேண்டி நேர்ந்திருக்காது . . . . . ."

முனியன் குறுக்கிட்டான். "நீங்க பேசறது எதுவும் புரியவில்லேயே. முழங்காலுக்கும் மொட்டைத் தலேக்கும் இல்ல முடி போடறீங்க ?"

"நான் திடீரென்று சொன்னல் உனக்குப் புரியாதுதான் முனியா ! எனக்கும் நடந்ததை எல்லாம் உங்கிட்ட சொல்லி மன்னிப்புக் கேட்டுக்கணும்னு ஆசை. இத்தனே நாளா தூங்கக்கூட இல்லேன பார்த்துக்கோயன்."

முனியன் பேசமுடியாமல் திகைத்தான். "வாயேன் உள்ளே. அம்மாகூட இல்லே மனம் விட்டுப் பேசுவோம்" என்று அவனே வற்புறுத்தி உள்ளே அழைத்துச் சொன்ருர் அவர்.



"பார்வதி! குழந்தை எத்தனே அழகாக நடக்கப் பழகுகிருன் பார்த்தாயா ?"

பார்வதி : என்ன பிரயோஜனம் ? இந்தக் காலத்திலே யார் ஒரு அடி நடக்கிருர்கள் ? 'லொட்' டென்ருல் 'கார்' இருக்கிறது. இல்லாவிட்டால் 'டாக்ஸி' இருக்கவே இருக்கிறது. நடக்கிறது நாகரிகம் தெரியாதவர்கள் செய்யும் வேலேயல்லவா ?

நான்கு வருடங்களுக்கு முன்பு பிள்ளேவாள் பணக்காரராக இருக்கவில்லே. பார்க்கப் போனல் உண்ண உணவுக்கும், உடுக்க உடைக்கும்கூடக் கதியில்லாமல் இருந்தார் என்றே சொல்ல வேண்டும். அவர் ஒவ்வொரு இடமாகத் தனக்கு வேலே ஏதாவது கிடைக்குமா என்று விசாரித்துக் கொண்டே வந்தார். கடைசியாக அவர் மனம் தளர்ந்த நிலேயில் அவருக்கு வேலே கொடுக்க முன்வந்தவர் பெரிய கடை ஏகாம்பரம் பிள்ளே.

ஊரிலேயே பெரிய ஜவுளிக் கடை ஏகாம்பரம் பிள்ளேயுடையது. ஏற்கெனவே இரண்டு பங்களாக்களுக்கும் பாங்கியில் ஏராளமான பணத்திற்கும் அதிபதியாக இருந்த ஏகாம்பரம் பிள்ளேக்கு பிள்ளேவாளே வேலேக்கு அமர்த்திக்கொண்டதிலிருந்து வியாபாரம் அதிகப்பட ஆரம்பித்தது.

பிள்ளேவாள் கடையில் சேர்ந்த சுமார் ஒரு வருடத்திற்கு பிறகு முனியன் ஏகாம்பரம் பிள்ளேயின் வீட்டில் வேலேக்கு சேர்ந்தான். முனியனும் பிள்ளேவாளும் நண்பர்களாகப் பழக ஆரம்பித்தனர். ஆனல் முனியனேக் காணும்போதெல்லாம் அவருக்கு என்னவோ இனம் தெரியாத வெறுப்பு ஏற்பட ஆரம்பித்தது. எஜமானருக்குத் தன்னிடம் இருக்கும் அதீதமான அன்பில் எங்கே அவனும் பங்கு ஏற்படுத்திக்கொண்டு விடுவானே என்ற பயம்தான் இத்தகைய வேறுப்புக்கு அடிப்படையான காரணமாக இருந்தது.

தன்னுடைய உண்மையான உழைப்பிலே அவருக்கு அன்பு ஏற்பட்டிருக்கிறது என்று பிள்ளேவாள் நினேத்தாரே தவிர அவர் மனதில் தோன்றி வைரம் பாய்ந்திருந்த நோக்கத்தைப் பற்றி அவர் உணரவே இல்லே. முறை கூறிக்கொண்டு தன் மகளேக் கட்டிக்கொள்ள யாரும் இல்லாது போகவே ஏகாம்பரம் பிள்ளேயின் எண்ணமெல்லாம் அவளே பிள்ளேவாளுக்கு மணம் செய்து கொடுத்து தன் ஜவுளிக் கடையையும் அவர் பேருக்கு மாற்றித் தன் அந்திம காலத்தை ஓரளவு நிம்மதியாகக் கழிக்கலாம் என்றே உறுதிக்கொண்டிருந்தது ; ஆனல் அவர் தன் முடிவை ஒருவரிடமும் வெளிப்படையாகச் சொல்லிவிடவில்லே. மகளேத் தனியாக விசாரித்து அவளுக்கு பிள்ளேவாளே மணம் செய்துகொள்ள விருப்பம் உண்டு என்பதை மாத்திரம் தெரிந்துகொண்டதுதான் சும்மா இருந்துவிட்டார் அவர்.

இந்த சந்தர்ப்பத்தில் பிள்ளேவாளுக்கு ஒரு கசடனின் நட்பு ஏற்பட்டது. "எம்பா எஜமானுக்கு இப்படி உழைக்கறியே. அவ்வளவு பணமும் உன் ரத்தம் சிந்தி சம்பாதிக்கிறே. ஆனல் அவ்வளவும் ஏகாம்

பரம் பிள்ளை வீட்டிலே பழைய பணத்தோடு துருப்பிடிக்கப் போய்ச் சேர்ந்துவிடுகிறது. இன்றைக்கு வேண்டுமானால் நீ ஒண்டிக் கட்டை. ஆனால் நாளைக்கு ஒரு பெண்ணைக் கட்டிக்காமலா இருப்பே? அப்பவும் எஜமான் கொடுக்கற நாய்க் கீசுக்கு திருப்திப் பட்டுவிடுவாய் போலிருக்கிறதே!" என்று தூண்டுவான் அவன்.

ஒரு நாள் "இந்தா பாரு. உன் எஜமான் கடையை மூடிக்கிட்டுக் கிராமத்தோடே போயி இருந்துடலாம்னு பார்க்கறாரு. உனக்கு ஒரு மாச சம்பளம் தான் மிஞ்சும். பிறகு நடுரோட்டிலே சோற்றுக்கு பறக்க வேண்டியதுதான்" என்றான்.

பிள்ளைவாள் இன்னது தான் செய்வதென்று தெரியாத நிலையில் "நீ என்னதான் செய்யணுமிங்கறே சொல்லேன் அருணாசலம். சும்மா புதிர் போட்டுப் பேசினா நான் என்ன செய்யறது?" என்றார்.

"அப்படி வா வழிக்கு. என் கிட்ட ஒரு ஐயாயிரம் ரூபாய் இருக்கு. இன்னைக்கி எட்டாவது நாள் தீபாவளியா? கடை வியாபாரம் எல்லாம் முடிஞ்சதும் ஒரு ஐயாயிரம் ரூபாய் பெறட்டிக்க; ராவோடே ராவா எங்கிட்ட கொடுத்திடு. மறுநாள் பொழுதோடே போயி எஜமானர் கிட்ட சாமி எனக்கு கணக்குத் தீர்த்துப்புடுங்க, ஊருக்குப் போறேன்னு சொல்லிட்டு வந்துடு. நாம்ப ரெண்டு பேருமா பத்தாயிரம் ரூபாய் முதலோடே வியாபாரம் ஆரம்பிச்சுடலாம்."

பிள்ளைவாள் "உண்ட வீட்டுக்கு துரோகம் பண்ணச் சொல்ரயே அருணாசலம்" என்று அலறினார்.

"என்? ஒன் அழகான எஜமான் உனக்குத் துரோகம் செய்யலையா? அவர் பெட்டியிலே இருப்பதெல்லாம் நீ தேடின பணம். அவருக்கு இப்படிப்பட்ட வாழ்வு ஏற்பட்டது உன்னாலே. ஆனால் சம்பளத்தைத் தவிர சல்லிக்காசு கண்டிருப்பாயா?" என்றான் அருணாசலம்.

பிள்ளைவாளுக்கு அவன் சொல்வது நியாயமாகப் பட்டது. அடுத்த எழு நாட்களுக்குள் அவர் மனதையே மாற்றிவிட்டாடான் அருணாசலம்.

அருணாசலம் திட்டமிட்டிருந்தபடியே எல்லாம் நடந்தது. இரவு எல்லாப் பணத்தையும் எண்ணிக் கட்டும்போது ஐயாயிரம் ரூபாய்களை எண்ணி எடுத்து முடிந்துகொண்டார். அவர் கடைத் தெருவுக்குச் சென்று மறுநாளைய பயணத்திற்கென தேவைப்பட்ட சில பொருள்களை சுமார் அறுநூறு ரூபாய்களுக்கு வாங்கினார். விடியற்காலை முதல் வண்டியிலேயே கிளம்பிவிடவேண்டும். இல்லையென்றால் மறுநாள் காலையில் கையிருப்புத் தொகை குறைவுபடுவது தெரிந்துவிடுமே!

ஆனால், அவர் திட்டம் எல்லாம் பாழ்படுவதே போலக் கடையை மூடும் சமயத்தில் ஏகாம்பரம் பிள்ளையே கடைக்கு வந்



திருந்தார். “தம்பி இன்னைக்கு ஊருக்குப் போகவேண்டாம். நம்ம வீட்டிலேயே உன் தீபாவளியை வச்சுக்க. நான் நினைக்கறபடி நடந்தா அடுத்த வருஷத் தீபாவளியைத் தலைதீபாவளியா நம்ம வீட்டிலே கொண்டாடிக்கலாம்” என்று அவர் கூறினபோது பிள்ளைவாளுக்குத் தூக்கி வாரிப்போட்டது.

பேச்சுவாக்கில் ஏகாம்பரம் பிள்ளையின் எண்ணங்களை எல்லாம் தெரிந்துகொண்டார் பிள்ளைவாள். அப்போது தான் அவர் செய்யவிருந்த மடத்தனமான செயலின் கொடுமையை அவரால் உணரமுடிந்தது.

வழியெல்லாம் அவருக்கு ஒரே கவலையாக இருந்தது. ஏகாம்பரம் பிள்ளை கணக்கு விஷயத்தில் ரொம்பக் கண்டிப்பு. அவருடைய பாராட்டுதலைப் பெற்று அவர் தன் பெண்ணைக் கூடத் திருமணம் செய்து கொடுக்க முன்வரும் அளவுக்கு அவரைக் கவர முடிந்தது பிள்ளைவாளின் சரியான் கணக்குக் காட்டும் தன்மையால் தான். ஆகவே அவர் மருமகனாகிவிட்டாலும் கணக்கைப்பார்க்கத் தவறமாட்டார் ஏகாம்பரம்.

நாலாயிரத்து நானூறு ரூபாய்களை வேண்டுமானாலும் திரும்பப் போட்டுவிடலாம். நல்ல வேளையாக அதை அருணாசலத்திடம் கொடுக்கவில்லை. மீதி அறுநூறு ரூபாய்களுக்கு எங்கே போவது. ஏகாம்பரம் பிள்ளையிடம் தன் தீபாவளிச் செலவுக்காக எடுத்துக் கொண்டதாகவும் சொல்லமுடியாது. அவரிடம் முதலில் ரூபாய்களைக் காட்டிக் கணக்கைச் சரிக்கட்டிய பிறகே தேவைப்பட்ட ரூபாயைக் கேட்டு வாங்கிக்கொள்ளலாமே தவிர நாமாக எடுத்துக்கொள்ள முடியாது.

பிள்ளைவாள் இறுதலைக்கொள்ளி எறும்பாகத் துடித்தார்.

வீட்டுக்குள் நுழைந்தபோது முனியன் வாசலில் நின்றுகொண்டிருந்தான். “என்னுங்க பிள்ளைவாள். அம்மாவோடே அட்டிகையைப் பத்தர்கிட்ட கொடுத்திட்டீங்களா” என்றுகேட்டான் அவன்.

இதைத் தொடர்ந்து பிள்ளைவாளின் மூளை தீவிரமாக வேலை செய்ய ஆரம்பித்தது. “மறந்தே போயிட்டேன் முனியா. இதோ ஒரு நொடியிலே போய் அட்டிகையை ஊட்டுக்குக் கொண்டு வந்திடறேன். நாலு பேர் புழங்கற இடம். யாராவது எடுத்துக்கிடப் போறாங்க” என்று சொல்லியவண்ணம் விடை பெற்றுக்கொண்டு சென்ற அவர் கடையைத் திறந்து அட்டிகையை ஒளித்துவைத்தார்.

வீட்டுக்குத் திரும்பினதும் “அட்டிகையைக் காணோமே” என்று அவர் போட்ட கூச்சல் இயற்கையாகவே இருந்தது. பிறகு என்ன? முனியன் திருட்டுக் குற்றம் சாட்டப்பட்டான். “மீதி பேர்களுக்கெல்லாம் இல்லாத கவலை இவனுக்கு ஏன்? இவன் என் அட்டிகையைப் பற்றி ஒன்றும் தெரியாதவன் போலப் பேச்சை ஆரம்பித்தான். நகையை முன்னதாகவே ஒளித்துவைத்துவிட்டு தன் பேரில் சந்தேகம் ஏற்படாமலிருப்பதற்காக கேட்டிருக்கிறான்” என்று அடித்துக் கூறினார் பிள்ளைவாள்.

ஏழை சொல் அம்பலத்தில் ஏறவில்லை. முனியன் குற்றவாளியாக ஜெயிலுக்குஅனுப்பப்பட்டான். உண்மைக் குற்றவாளியோ எஜமானரின் பெண்ணை மணந்து அவர் கடைக்கே சொந்தக்காரராகிவிட்டார்.

இவ்வளவையும் சொல்லி முடித்தார் பிள்ளைவாள். “முனியா, என் மனச்சாட்சி என்னைச் சும்மாவிடவில்லை அப்பா. இரவும் பகலும் வாட்டி எடுத்துவிட்டது. நாணயங்களில் பொறித்திருக்கும் ராஜாவின் தலைக்குப் பதிலாக அவைகளில் உன் சோக முகத்தைத் தான் கண்டேன் நான். அது என்னைப் பழிக்குப் பழி வாங்கியே தீருவதாக சபதம் செய்யும்.

நான் செய்த பாபத்திற்கு பிராயச்சித்தமாக நீ இங்கேயே வேலைக்கு வந்துவிடு அப்பா. என் மனைவியை நான் எப்படியாவது சரிப்படுத்திவிடுகிறேன். உன்னால் எனக்கு ஏற்படக்கூடிய இந்த சந்தோஷத்தைத் தர மறுக்காதே” என்று மன்றாடினார் பிள்ளைவாள்.

முனியன் கதறி அழுதான். “சுவாமி ஏதோ என்னாலே என்னைப்போன்ற ஒரு ஏழை பெரிய மனிதனாக மாற முடிந்ததைக் குறித்து ரொம்பவும் சந்தோஷம். ஆனால் உங்க கிட்ட வேலை செஞ்சா ஒரு நாள் இல்லாவிட்டாலும் ஒரு நாள் நீங்க சொல்லிக்கிட்டு வந்த இதே கதையை யாரிடமாவது சொல்லத் தோன்றும். அப்ப உங்க கௌரவமெல்லாம் பாழாயிடாதா? வேண்டாம். நான் எங்கேயாவது தூர தேசத்திலே போய் பிழைச்சுக்கறேன்” என்றான் அவன்.

அடுத்த நிமிடம் சாலையிலே இறங்கி நடக்க ஆரம்பித்தான் அவன். தான் அபகாரம் செய்திருந்தும் தன்னுடைய நன்மைக்காக தன் பிழைப்பையேகூட விடத் துணிந்துவிட்ட அவன் காலடிகளில் மிளிர்ந்த கம்பீரத்தையும் பெருமிதத்தையும் கண்ணுற்றபடியே நின்றுவிட்டார் பிள்ளைவாள்.

குலுங்கும் படுக்கை.

அமெரிக்க ஆஸ்பத்திரியில் ஒரு புது வகையான படுக்கை உபயோகப்படுகிறது. மேஜை, நாற்காலி முதலியவற்றை விற்கும் ஓர் அமெரிக்கக் கம்பெனி தயாரித்த இப் புதுவகைப் படுக்கையில் சிறிய ஒரு மின்சார மோட்டார் பொருத்தப்பட்டிருக்கிறது. இதனால் படுக்கை மெதுவாகக் குலுங்குகின்றது; எனவே நோயாளிகள் உறங்குவதற்கு உதவியாகிறது.

எல்லோருக்கும் உணவு!

நீர்வளத்தைப் பெருக்குவது பற்றிய தகவல்களை எல்லா தேசங்களும் தம்முள் பகிர்ந்துகொண்டு ஒத்துழைத்தால் உலகத்தின் உணவுப் பற்றுக்குறை தீர்ந்துவிடும்.

சரியாக உபயோகப்படுத்தினால், உலகின் உணவு உற்பத்தியை இரட்டிக்கப் போதிய தண்ணீர் உலகில் இருக்கிறது. இப்பொழுது இருந்து வரும் ஆறுகள், ஏரிகள், மழை நீர் முதலியவற்றுக்குச் சரியான வழி வகைகள் வகுத்து உபயோகப்படுத்தினால் வறண்ட பிரதேசங்களையும் வளம் பொருந்தியதாக்கலாம். சரியானபடி வடிகால்கள் வகுத்து, தண்ணீர் போக மாற்றுவழி அமைத்து, தண்ணீரைத் தேக்கி வைப்பதற்கும் ஏற்பாடு செய்தால் சதுப்பு நிலங்களையும் பயிருக்குக் கொண்டு வரலாம். மனிதனின் கட்டுப்பாட்டிற்கு உட்பட்டதுதான் தண்ணீர். மனிதன் கடந்த 5000 வருஷங்களாக உணவு உற்பத்திக்குத் தண்ணீரை உபயோகித்து வருகிறான். அதை இன்னும் நன்றாக உபயோகப்படுத்த, வளரும் விஞ்ஞானத்தின் புதுப் புதுத் தொழில் நுட்பங்கள் உதவும்.

இத்தகைய தகவல்களைப் பகிர்ந்துகொள்ளும் நோக்கத்துடன் பின் தங்கிய சுதந்திர நாடுகளுக்கான பல திட்டங்கள் உருவாகி வருகின்றன. இதில் ஒன்று ஐ.நா. வின் உணவு விவசாய ஸ்தாபனம் ஆரம்பித்ததாகும். ஐ.நா. தொழில் நுணுக்கத் திட்டமும் பின் தங்கிய நாடுகளின் நீர்வளத்தை எப்படி உபயோகப்படுத்துவது என்பதை ஆராய்ந்து வருகிறது. அமெரிக்க ஜனாதிபதி ட்ரூமனின் நாலாவது அம்சத் திட்டத்தில் பின் தங்கிய நாடுகளின் நீர்ப்பாசனத்தைப் பற்றிய ஆராய்ச்சி வற்புறுத்தப்பட்டிருக்கிறது.

உலகில் உள்ள மக்கள் எல்லோருக்கும் போதிய உணவு அளிப்பது எப்போதுமே பிரச்னையாய் இருந்து வந்திருக்கிறது. உலகின் ஜனத்தொகை வெகு வேகமாகப் பெருகிக்கொண்டிருக்கும் இந்த நாளில் உணவுத் தேவையும் அதிகமாகிறது.

ஏற்கெனவே உள்ள நீர்ப்பாசன வசதிகள் இந்த உணவுப் பிரச்னையை ஒருவாறு சமாளித்து வருகின்றன. உலகில் இன்னும் 100 கோடி ஏக்கர் சதுப்பு நிலமும் 20 கோடி ஏக்கர் பாலைவனப் பிரதேசமும் அபிவிருத்தியடைய வேண்டியிருக்கிறது.

இந்தப் பெரிய திட்டம் ஒரு நாளிலோ அல்லது ஒரு வருஷத்திலோ முடியக்கூடிய காரியமல்ல. இதில் அரசியல் உட்பட எத்தனையோ விஷயங்களைக் கவனிக்க வேண்டியிருக்கிறது. இது மிகவும் கஷ்டமான காரியம்தான்; ஆனால் முடியாத காரியமல்ல. மழை பெய்விப்பதற்கும், சமுத்திர ஜலத்தை நல்ல தண்ணீராக்குவதற்கும் நடக்கும் ஆராய்ச்சிகளும் ஏதாவது ஒரு நாள் பலனளித்து, ஏரிகளுக்கும் ஆறுகளுக்கும் தண்ணீர் கொடுக்க உதவலாம்.

உஷார்!
பாத்து வெட்டு தம்பி!

"பாத்தியா? வேலையைக் கவனிக்காமே வேறே எங்கேயோ கவனமா யிருந்தா இந்தக் கதிதான்."



எல்லாம் தொழிலாலே

1. உலகம் இயங்குதல் தொழிலாலே
உன்னதம் நிகழ்வதும் 'தொழிலாலே
ஆலயம் அனைத்தும் தொழிலாலே
அனைத்துயிர் வாழ்வதும் தொழிலாலே.

2. காரிருள் சூழ்வதும் தொழிலாலே
கலாநிதி ஒளிர்வதும் தொழிலாலே
சூரியன் வருவதும் தொழிலாலே
சூழ்இருள் அகல்வதும் தொழிலாலே.

3. வீடுகள் அமைவதும் தொழிலாலே
விதிகள் அமைவதும் தொழிலாலே
நாடுகள் சிறப்பதும் தொழிலாலே
நாகரிகம் வளர்வதும் தொழிலாலே.

4. கமலம் மலர்வதும் தொழிலாலே
கருவண்டு இசைப்பதும் தொழிலாலே
இமை கொட்டுதலும் தொழிலாலே
இழுத்திடும் மூச்சும் தொழிலாலே.

கப்பல் புனைவதும் தொழிலாலே
கடலினைக் கடப்பதும் தொழிலாலே
செப்பொணாப்பெருமைகள் தொழிலாலே
செழுமைகள் யாவும் தொழிலாலே.

6. விஞ்ஞானம் வளர்வதும் தொழிலாலே
விந்தைகள் பலவும் தொழிலாலே
அஞ்ஞானம் அகல்வதும் தொழிலாலே
அறிவுபரவுதலும் தொழிலாலே.

7. அயர்வு நீங்கும் தொழிலாலே
ஆண்மை ஓங்கும் தொழிலாலே
உயர்வும் உண்டு தொழிலாலே
உய்வும் உண்டு தொழிலாலே.

8. வெல்வது யாவும் தொழிலாலே
விரும்புதல் பெறுவதும் தொழிலாலே
இல்லாமை இல்லை தொழிலாலே
எல்லாம் உண்டு தொழிலாலே.

—பெ. ஜெகந்நாதன்



செவிடர் குருடருடன் பேசும் யந்திரம்!

செவிடர், குருடர் என்று வேடிக்கையாக சொன்னாலே நமக்கு எவ்வளவு ரோஷமும் கோபமும் பொத்துக்கொண்டு வருகிறது! ஆனால் உண்மையிலேயே செவிடாகவும் அதேபோல குருடாகவும் இருக்கும் அபாக்கியசாலிகள் வாழ்க்கையில் என்ன பாடு படுவார்கள் என்பதை சற்று சிந்தித்துப் பாருங்கள். சதாகாலமும் மனம் நொந்து காலத்தை தள்ளிவரும் குருடர்-செவிடர் (அதாவது கண்களையும், காதுகளையும் இழந்தவர்) களைப்போன்ற ஏகாந்திகள் பூவுலகில் வேறு யாருமில்லையென்றே சொல்லலாம். கண் பார்வையின்றியும் காது கேட்காமலும் அவதிப் படும் ஒரு நபரின் மனத்துயரை, வாழ்க்கையில் வெறுப்பை சொல்லித் தாளாது. தொட்டுப் பார்த்து அறியும் ஒரே உணர்ச்சிதான் இவர்களுக்கும் உலகிற்குமிடையேயுள்ள ஒரே தொடர்பு. குருட்டுச் செவிடர்களுடன் தொடர்பு வைத்துக்கொள்ள விரும்பினால் பிரெயில் பாஷை தெரிந்திருக்கவேண்டும்.

குருட்டுச் செவிடர்களை சந்தோஷமாக வைத்துக்கொள்ள வேண்டுமென்பதற்காகத் தான் பிரிட்டனில் பல விசேஷ விடுதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. இவ்விடுதிகளிலுள்ள அனைவரும் குருட்டுச் செவிடர்கள். இவர்களுக்கு ஏற்ற சூழ்நிலையே இவ்விடுதிகளிலுள்ளது. இவர்களுக்கு வாழ்க்கையில் நம்பிக்கை ஊட்டுவதற்காக பல சமூகத் தொண்டர்கள் . தாமாகவே முன்வந்து உதவி வருகின்றனர். என்றாலும் இவ்விடுதிகளில் சேவை செய்ய பிரெய்ல் பாஷை தெரிந்திருப்பது அவசியமாக இருந்து வந்துள்ளது. ஆனால் இனி இப்பிரெய்ல் பாஷை அறிந்திருக்கவேண்டிய அவசியம் எழாது. ஏனெனில் குருட்டுச் செவிடர்களுடன் எந்தவொரு நபரும் சம்பாஷணை நடத்துவதை சாத்தியமாக்கும் புரட்சிகரமான சாதனமொன்று பிரிட்டனில் கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது.

இச்சாதனம் கண்டுபிடிக்கப்பட்டதே ஒரு ரஸமான விஷயமாகும். சுமார் இரண்டு வருடங்களுக்கு முன்பு 28-வயதான வாலி தாமஸ் என்ற இளைஞர் பிரிட்டிஷ் ஆஸ்பத்திரியொன்றில் சிகிச்சை பெற்று வந்தார். விமான விபத்தின் விளைவாக இந்த இளைஞர் கண்களையும் காதுகளையும் இழந்துவிட்டார். வார்டிலிருந்த இதர நோயாளிகள் இவ்விளைஞரின் நிலையைக் கண்டு பரிதபித்து ஏதாவது உதவ விரும்பினர். ஆனால் செவிடரான, குருடரான இந்த இளைஞருடன் பேச அவர்களால் இயலவில்லை. "இனி நாம் என்ன செய்ய முடியும்?" என அவர்கள் முடிவுக்கு வந்தனர். ஆனால் ஒருவர் மட்டும் இத் தோல்வியை ஏற்க மறுத்துவிட்டார். வாலி தாமஸின் நிலையைக் கண்டு மனம் உருகினார். அந்தோ! இவரைப்போல உலகில் எத்தனை பேர் இவ்வித கஷ்டத்துக்கு ஆளாகி வாழ்க்கையில் வெறுப்புற்று நடைப் பிணங்களாக உழலுகின்றனர் என்பதை எண்ணிப் பார்த்தார். தாமும் ஒரு எஞ்ஜினீர்— அதுவும் ஒரு ஆராய்ச்சியாளர். வாலி தாமஸ் போன்ற செவிடர், குருடர்களின் மனக்கவலையைப் போக்க வழி கண்டே தீருவது என அவர் உடனே உறுதிகொண்டார். ஏ. ஆர். கூப்பர் என்ற பெயருள்ள மின்சார எஞ்ஜினீர்தான் அந்த நபர். இவர் பிரிட்டிஷ் மின்சார இலாகாவில் தற்போது டிவிஷனல் கண்ட்ரோலராக வேலை பார்க்கிறார்.

ஸ்ரீ. கூப்பர் ஆஸ்பத்திரியிலிருந்து சொஸ்தமாகி வந்ததும் குருடர்-செவிடர்களுடன் பேசுவதற்கான ஒரு சாதனத்தை தயாரிக்கும் ஆராய்ச்சியில் ஈடுபட்டார். இதர மின்சார நிபுணர்களின் உதவிகொண்டு தமது ஆராய்ச்சியில் கிடைத்த கொள்கைப் படி ஒரு இயந்திரத்தை தயாரித்தார். தாம் தயாரித்த இந்த "பேசும்" சாதனத்தை ஸ்ரீ. கூப்பர் முதன் முதலாக ஆஸ்பத்திரியிலிருந்த வாலி தாமஸுடன் தான் பேசிக் காட்டினார்.

ஸ்ரீ கூப்பர் தயாரித்துள்ள இயந்திரத்தின் ஒரு முனையில் சாதாரண டைப்ரைட்டரிலுள்ளதைப் போன்ற எழுத்து வரிசைகள் உள்ளன. சகலரும் இதை இலகுவாக உபயோகிக்க வேண்டுமென்பதற்காக ஏ, பி, ஸி, டி எழுத்துக்கள் அகர வரிசையில் பொருத்தப்பட்டுள்ளன. இயந்திரத்தின் மற்றொரு முனையில் ஆறு துளைகள் இருக்கின்றன. குருடு-செவிடான நபர் இத்துளைக்குள் மேலே தனது கைகளை வைத்துக்கொள்கிறார். முதல் முனையிலுள்ள ஏ, பி, ஸி, டி எழுத்துகளை அழுத்தினால் அதற்கு இணையான பிரெய்ல் எழுத்து செவிடு-குருடரின் விரல்களில் மோதுகிறது.

ஸ்ரீ கூப்பர் தயாரித்துள்ள இந்த புரட்சிகரமான சாதனத்தைக் கொண்டு பிரெய்ல் பாஷை தெரியாத எவரும் செவிடு-குருடருடன் பேசலாம். லிவர்பூல் நகரிலுள்ள செவிடு-குருடர் நிலயத்தின் அதிபர் இந்த சாதனத்தை தமது நிலயத்தில் பரீட்சித்து பார்த்துவிட்டு இது ஒரு வரப்பிரதாசமே என கூறியுள்ளார். இதுபோன்ற இயந்திரங்களை · அதிகப்படியான அளவில் தயாரித்து ஒவ்வொரு நிலயத்திற்கும் சப்ளை செய்யவேண்டுமென யோசனை கூறப்பட்டுள்ளது.

அலைகடல் படகு



கருநீலவண்ணம் கூட்டி குலுங்கும் கடல்! அதிலே நீரைக்கிழித்து தாய்நாட்டை நோக்கித் தவழும் நாவாய்! கொந்தளிப்பு, சூறாவளி முதலியனவற்றை பொருட்படுத்தாது முன்னேறுகிறது கலம்; வாழ்க்கையில் தட்டுப்படும் இடையூறுகளை களைந்து முன்னேறும் அறிவாளியைப்போல. இது வாழ்க்கையின் முதற்படியிலே நிற்கும் இளைஞர்களுக்கு ஒரு நல்ல படிப்பினை! கப்பலிலே தமிழ்க்கொடி வானளாவி காற்றிலே வளைந்தாடுகிறது கடலலைகளைப்போல. பறவைகள் சிறகடித்துப் பறந்து கப்பலுக்கு வழி காட்டிகளைப்போல உடன் வருவது கோலாகலக் காட்சி! இப்பெருங்கலத்திலே பொன்னவிர் மேனியாளைக் காண பொன்னாடு திரும்பும் பாறையனைய தோள்வலி படைத்த இளைஞர்கள் உண்டு. களிமயிலாட, கோலக்குயில் பாட காதலன் கரங்களிலே கண்மூடி உறங்க ஏங்கித் தவிக்கும் குமுத முகத்துக் கொஞ்சும் கிளியனைய கோதைகள் எத்தனையோ?

கை வளை குலுங்க, கால் சிலம்பொலிக்க, துடியிடை துவள புன்னகை கலிக்க, கருங்குழல் புரள காதலன் மார்பிலே விம்மிப்புரள ஓடோடியும் வரும் நளின முக நங்கையைப் போன்றன்றோ வருகிறது நாவாய்!

'ராஜி'

தேன் கூடு

~முரளீ~

அன்று பள்ளிக்கூடம் இல்லை. சனிக்கிழமை விடுமுறைநாள். நவநீதம் வழக்கம்போல அன்று கிராமத்தைச் சுற்றிப் பார்த்து வரப் புறப்பட்டாள். ஒவ்வொரு சனிக்கிழமையும் காலையில் ஏழு மணிக்குள் அவள் புறப்பட்டுவிடுவது வழக்கம். சுமார் பதினொரு மணிக்குத்தான் வீடு திரும்புவாள். காலில் செருப்புப் போட்டுக்கொண்டு ஒரு கையில் குடையும் மற்றொரு கையில் சிறு தோல் பெட்டியொன்றுமாக அவள் கிராம வீதிகளின் வழியாக நடந்து செல்லும்போது தெருவில் விளையாடிக்கொண்டிருக்கும் குழந்தை குட்டிகள் அவளைப் பார்த்து மகிழ்ச்சி பொங்க சிரிப்பார்கள். சில குழந்தைகள் ஆங்கில முறையில் 'குட் மார்னிங் டீச்சர்' என்று காலை வந்தனம் செலுத்துவார்கள். சில குழந்தைகள் தமிழ் மரபுப்படி 'வணக்கம் அம்மா' என்று உள்ளங்கனிந்து கூறுவார்கள். அவர்களுக்கெல்லாம் தனது அன்பு ததும்பும் புன்னகை மூலம் பதில் அளித்துக் கொண்டே நடந்துசெல்வாள் நவநீதம்.

நவநீதம் தனியாகவேதான் இந்த சமூகத் தொண்டுக்குப் புறப்பட்டுப்போவாள். ஆயா ஆரம்பத்தில் தானும் வருவதாக கூறினாள். நவநீதத்துக்கு அது இஷ்டமில்லை. "ஆயா! உன்னால் முடியாது. மூன்று அல்லது நாலு மணி நேரம் நடப்பது இந்த வயதிலே உனக்கு ஆயாசம் உண்டாக்கும். நீ வரவேண்டாம்" என்று சொன்னாள் அவள். ஆனால் ஆயாவுக்கு நவநீதம் தனியாகப் போவதால் அலுப்புத்தட்டுமே என்று தோன்றியது. எனவே தானும் தான் போகவேண்டும் என்று நிர்ப்பந்தம் பண்ணினாள். ஆனால் உண்மையில் ஆயாவினால் முடியவில்லை. நாலு சனிக்கிழமைகளுக்குள்ளாகவே அவள் நோயில் படுத்துவிட்டாள். அதனால் நவநீதத்துக்குக் கூட ஒருதடவை வேலை கெட்டுவிட்டது. அதிலிருந்து ஆயா தானும் கூடப்போகவேண்டும் என்று வற்புறுத்துவதில்லை.

நவநீதம் தெருவில் நடந்து செல்லும்போது வீட்டுவாசல்களில் குப்பை கூளங்களைக் கொட்டியிருப்பதனால் ஏற்படும் தீமைகளைப்பற்றி மக்களுக்குச் சொல்லுவாள். குழந்தைகுட்டிகளை வாசற்புறங்களில் மலஜலம் கழிக்கும்படி பழக்கம்பண்ணும் பெற்றோர்களது அறியாமையைப் பற்றி எடுத்துரைப்பாள். குப்பை மேடுகள் வீடுகளுக்குச் சமீபமாயிருந்தால் அங்கிருந்து பறந்துவரும் தூசி எப்படி வீட்டையும் மக்களையும் அசுத்தப்படுத்துகிறது என்பதைத் தெளிவாக அவர்களுக்கு விளக்கிக் கூறுவாள். திடீரென்று ஒரு வீட்டுக்குள் நுழைவாள். வீட்டுச்சாமான்கள் தாறுமாறாக இறைந்து கிடப்பதையும் வீடு ஒரே களேபரமாகக் கிடப்பதையும் பார்த்து வருத்தப்பட்டுக்கொண்டு சாமான்களை ஒழுங்காக வைக்கவேண்டிய அவசியத்தைப் பற்றி ஒரு பிரசங்கமே செய்துவிடுவாள்.

ஆரம்பத்தில் இந்த மாதிரி வேலைகளில் பலவிதமான தொந்தரவுகளும் ஏற்பட்டன. பல குடும்பஸ்தர்கள் நவநீதத்தை எதிர்த்துப்பேசி ஏளனம் செய்யவும் முயன்றனர். "இந்தம்மா எங்களையெல்லாம் ஒழுங்கு பண்ண வந்துட்டா. குடிக்கக் கூழு கிண்டயாது. கட்டச் சரியான கந்தை கிடையாது. இருக்கிற ஆஸ்தியெல்லாம் சட்டியும் பானையும்தான். இதுகளை எங்கே வச்சா என்ன எப்படிப்போட்டால் என்ன? ஒழுங்காய் வைக்கணுமாம். அழகு பண்ணணுமாம்.

சென்னை மந்திரி கனம் எச். சீதாராம ரெட்டியார், இந்தியா சர்க்காரின் பிரதிநிதியாக சமீபத்தில் ஜினீவாவில் நடைபெற்ற சர்வதேசத்தொழில் ஸ்தாபன வருஷாந்திர மகாநாட்டுக்கு விஜயம் செய்தார்.

உடம்பிலே தெம்பிருந்தாதானே அழகு கிழகு எல்லாம் ?" என்று பேசும் மக்களை எப்படித் திருத்துவது என்றே நவநீதத்துக்குத் தோன்றியது.

நாள் செல்லச் செல்ல அவள் தான் எடுத்துக்கொண்ட இத்தகைய சமூகப்பணியில் இருந்த கஷ்டங்களை யெல்லாம் உணர்ந்தாள். சிறுக சிறுகக் கிடைத்த சிறுமைகளையும் உணர்ந்தாள். அவளுக்கே சில சமயங்களில் ஒருவிதமான தாழ்மை உணர்ச்சி ஏற்படும். "இந்த வேலையினால் பலன் என்ன ? மக்கள் திருந்துவார்கள் என்பதற்குக் கொஞ்சம் கூட அறிகுறி தென்படவில்லையே" என்று எண்ணியெண்ணி ஏங்குவாள்.

காலையில் நாலுமணிநேரம் உழைத்துவிட்டுவந்து பிற்பகலில் தான் அன்றுசெய்த வேலைகளைப்பற்றிய குறிப்பு ஒன்று எழுதி வைப்பாள். வேலையின்போது மக்கள் எப்படி நடந்து கொண்டனர் என்பதையும் குறித்துக்கொள்ளுவாள். பிறகு ஓய்வு கிடைத்தபோது அவள் தனக்குள்ளாகவே ஒரு ஆராய்ச்சி செய்து முடிவு காண்பாள். பிற நாடுகளில் சமூக ஊழியம் புரியும் தொண்டர்களின் வரலாறுகளைப் படிப்பாள். அவர்கள் தங்கள் தொண்டில் என்னென்ன அசௌகரியங்களை அனுபவித்தார்கள் என்று அறிந்து கொண்டு அதேமாதிரிதான் தனக்கும் அனுபவம் ஏற்பட்டுவருகிறது என்று மனத்தைத் தேற்றிக்கொள்வாள்.

இப்படியாக ஓர் ஒழுங்கு முறைப்படி திட்டம் அமைத்துக்கொண்டு நவநீதம் செய்து வந்த தொண்டுக்கு நாளடைவில் ஆதரவு கிடைக்கலாயிற்று. ஆரம்பத்தில் ஐயத்துடன் நோக்கிய மக்கள் இன்று அன்புடன் நோக்கி ஆதரவுடன் வரவேற்கும் அளவுக்கு அவளது மதிப்பு உயர்ந்தது. தன்னலமற்ற தொண்டு அவளுடையது. மக்கள் நல்வாழ்வு வாழவேண்டும் என்கிற ஒரே நோக்கத்துடன் அவள் தொண்டாற்றிவருகிறாள் என்பதை அவர்களே உணர்ந்து கொண்டனர். இப்போதெல்லாம் அவள் சனிக்கிழமையன்று வீதிகளின் வழியாக நடந்து செல்லும்போது அவளுக்கு அதிக வேலை இராதபடி அவர்களே பார்த்துக்கொண்டனர்.

அவள் நடந்து செல்லும் வீதிகள் சுத்தமாக இருக்கும். அவள் நுழையும் வீடுகளில் சாமான்களும், தட்டுமுட்டுக்களும், துணிமணிகளும் அதற்கு உரிய இடங்களில் ஒழுங்காக வைக்கப்பட்டிருக்கும். மண்ணில் கையைத் துழாவிய வண்ணம் விளையாடிக்கொண்டிருக்கும் குழந்தைகூட கைகளை நன்றாகத் தட்டி மண்ணைப்போக்கிவிட்டு "வணக்கம் அம்மா! கொஞ்ச நேரம் விளையாடிவிட்டு கைகளைக் கழுவிக்கொள்ளுகிறேன் அம்மா. துணியிலே எல்லாம் அழுக்காக்கிக் கொள்ளமாட்டேன் அம்மா!" என்று அடிக்கொரு 'அம்மா' போட்டுப் பேசும். அந்த அளவுக்கு கிராமம் முன்னேற்றமடைந்துவிட்டது.

இருந்தபோதிலும் எல்லா வீடுகளிலும், எல்லா மக்களிடமும் ஒரேவிதமான துப்புறவு இருந்துவிடுமா ? ஆங்காங்கு 'அப்படியப்படி' இருக்கத்தான் செய்தது. ஆகவே நவநீதம் சனிக்கிழமைகளில் எப்போதும்போலவே தன் பணியை விடாமல் செய்துவந்தாள். அன்றும் அதேமாதிரிதான் புறப்பட்டாள். முதல்நாள் இரவு மழை பெய்து மண் ஊறியிருந்தது. மழை சற்றே பலமாகப் பெய்ததால் சிறு பள்ளங்களிலும் குட்டைகளிலும் தண்ணீர் தேங்கியிருந்தது. நவநீதம் வழக்கம் போலவே கையில் குடையும் காலில் செருப்புமாக நடந்து கொண்டிருந்தாள். இப்போதெல்லாம் முன்போல அவள் தோல் பெட்டியைத் தானாகவே தூக்கிச் செல்வதில்லை. பள்ளி மாணவன் ஒருவன் அவள் புறப்படுவதற்குமுன்பே அதைச் சுமந்து செல்லவென்று தயாராகக் காத்திருப்பான். மாணவர்கள் வாரம் ஒருவர்வீதம் தாங்களாகவே முறை போட்டுக்கொண்டு இந்தக் காரியத்தைச் செய்து வரலாயினர்.

நவநீதம் அவர்கள் உதவியைக் கோரவில்லை. ஆனால் அவளது தன்னலமற்ற தொண்டையும், அவள் மக்களுக்குப் போதித்துவரும் கல்வியையும் உத்தேசித்து அவர்களாகவே இந்த ஏற்பாட்டைச் செய்து கொண்டார்கள். மக்களே மனமுவந்து தமது பிள்ளைகளை இந்த வேலைக்கு அனுப்பி வைத்தார்கள். இதனால் நவநீதத்துக்கும் ஓரளவு கஷ்டம் குறைந்தது. அன்று நவநீதத்துடன் கூட பாலசுந்தரம் என்னும் பையன் தோல் பெட்டியைச் சுமந்தவண்ணம் சென்றான்.

முதல் இரவு மழை பெய்த போது மக்களில் சிலர் தம் குழந்தைகுட்டிகளை அஜாக்கிரதையாக ஊதற் காற்றுப்படும்படி விட்டிருந்தபடியால் காலையில் நவநீதம் செல்லும்போது பல வீடுகளிலிருந்து தாய்மார்கள் "வாத்திம்மா! உள்ளே கொஞ்சம் வந்து போறீங்களா? குழந்தைக்கு இளஞ்சூடா உடம்பு காயுது! குழந்தை ராத்திரியிலிருந்து லொக்கு லொக்கென்று இருமுது" என்பது போல பேசி அழைத்தார்கள். நவநீதம் அந்த வீடுகளுக்குள் சென்று குழந்தைகளைச் சோதித்து மருந்து

குட்டி டாக்டர்: டாக்டர் ஸார்! நீங்கள் என் நோயாளிகளின் சாப்பாட்டு விஷயங்களையெல்லாம் கேட்கிறீர்கள்?

பெரிய டாக்டர்: சாப்பாடு பலமானதாயிருந்தா பில் பெரிய பில்லாயிருக்கும். சொல்ப சாப்பாடு சாப்பிடுகிற ஆசாமியானு அதற்குத் தகுந்தாப்போல பில் போடலாம்.

கொடுத்தாள். அவளது தோல் பெட்டியில்தான் அவள் மருந்துகளை வைத்திருந்தாள். இப்படிப்பட்ட அவசரத்துக்கென்று தான் தோல் பெட்டியை அவள் எடுத்துச் செல்வது வழக்கம். நாள்பட்ட நோய் நொடிக்காரர்களை வாரம் ஒருமுறை பரிசோதித்து அந்த வாரத்துக்கு வேண்டிய மருந்தைக் கொடுப்பதும் உண்டு.

காலையில் வீட்டு வேலைகளைக் கவனிக்கும் பெண்களைத் தவிர மற்றப் பெண்களோ, சிறுமிகளோ குழந்தைகளோ எப்படிப் பொழுது போக்குகிறார்கள் என்பதையும் நவநீதம் கண்டறிவாள். எப்படி உபயோகமானவிதத்தில் நேரத்தைச் செலவிட வேண்டும் என்பதையும் போதிப்பாள். ஆகவே அவளது போதனையினால் மக்கள் அந்தந்த நேரத்தில் அந்தந்த வேலையைச் செய்வது என்கிற முறையைப் பின்பற்றி வரலாயினர் என்று கூடச் சொல்லலாம். நவநீதம் ஒரு வீட்டுக்குள் திடீரென்று நுழைந்தாள். "வாங்க வாத்திம்மா!" என்று சொல்லிக்கொண்டே வீட்டு முன்புறத்தில் உட்கார்ந்திருந்த பெண் எழுந்து அவளை வரவேற்றாள். அந்தப் பெண் எடுத்துப்போட்ட பலகையின்மீது உட்கார்ந்து நவநீதம் அவளை யோகக்ஷேமம் விசாரித்தாள். "அம்மா தண்ணீர் மொண்டு வரக் கிணற்றுக்குப் போயிருக்கிறாள். நேற்று தம்பி சட்டையைக் கிழித்துக் கொண்டுவந்துவிட்டான். அதைத் தைத்துப்போட்டால் இன்னும் இரண்டு மாதம் போட்டுக்கொள்ளலாம். அதைத் தைத்துக்கொண்டிருக்கிறேன் வாத்திம்மா" என்று பதில் சொன்னாள் அந்தப் பெண். வேறொரு வீட்டிலே ஒரு பெண் ஒரு மேல் துண்டுக்குப் பூ வேலை செய்து கொண்டிருந்தாள். அவள் குடும்பம் கொஞ்சம் வசதியுள்ள குடும்பம் என்பது உள்ளே நுழையும்போதே தெரியும். அவள் நவநீதத்தைப் பார்த்து "வாத்திம்மா! இந்தப்பூ வேலை நன்றாயிருக்கிறதா பாருங்கள்" என்று கேட்டாள்.

நவநீதம் துண்டை வாங்கிப் பார்த்தாள். "பூ வேலை நன்றாய்த்தான் இருக்கிறது, ஆனால் இந்தத் துண்டு மேலே போட்டுக் கொள்ளுகிற துண்டுதானே? இதில் என் பூவும் காயும். ஜன்னலுக்குப் போடும் திரையிலோ, மேஜை விரிப்பிலோ, ஜாக்கெட்டிலோ இப்படிச் செய்தால் அர்த்தம் உண்டு. மேல் துண்டிலே எதற்குப் பூ வேலை?" என்று கேட்டாள் நவநீதம்.

அந்தப் பெண் வெட்கத்துடன் சிரித்துக் கொண்டே தலைகுனிந்தாள். அதற்குள்ளாக அங்கே ஓடிவந்த அவள் தங்கை "வணக்கம் வாத்திம்மா! அத்தான் இரண்டு நாளுக்கு முன்னே இங்கே வந்து

விட்டுப் போனபோது மேல் துண்டை ஞாபக மறதியாய் வைத்துவிட்டுப் போய்விட்டார். அக்காள் தன் அருமைக் கணவன் துண்டுக்கு அலங்காரம் பண்ணுகிருள்" என்று படக்கென்று சொல்லிச் சிரித்தாள். நவநீதமும் இதைக் கேட்டுச் சிரித்துவிட்டு "அப்படியா சமாசாரம்! நான் தெரியாமல் கேட்டதை மன்னித்துக்கொள் அம்மா!" என்று சொல்லிச் சிரித்துக்கொண்டே வெளியேறிஞள். "போங்கள் வாத்திம்மா, நீங்கள்கூடக் கேலி பண்ணுகிறீர்கள்!" என்று அவள் சொன்னதை நவநீதம் காதில் வாங்கிக்கொள்ளவில்லை.

அவள் தெருவழியே நடக்கலாஞள். அவள் உள்ளம் இப்போது ஒரு நிலையில் இல்லை. அந்தப் பெண்ணைப்பார்த்து பரிகாசம் பண்ணிவிட்டு வந்தபோதிலும், அவளது பெண்ணுள்ளம் பின்னேக்கிப் பாய்ந்தது. வருஷங்கள் பல கடந்துதான் போயின. ஆனல் அவள் உள்ளத்தில் ஊறிக்கிடந்த குருநாதனின் நினைவு மாத்திரம் மறக்கவில்லை. பெருமூச்செறிந்த வண்ணம் அவள் தன்னுணர்வின்றி நடந்து சென்ருள்.

ஒரு வீட்டிலிருந்து கேட்ட "ஓ" வென்ற இறைச்சல்தான் அவளை மீண்டும் தன்னுணர்வு பெறச் செய்தது. எதிரே இருந்தது திலகத்தின் வீடுதான். அங்கிருந்துதான் அந்தப் பேரிறைச்சல் கேட்டது. திலகம் கண்ணுங் கண்ணீருமாக ஓடி வந்தாள் வாசலுக்கு. "வாத்திம்மா! கொஞ்சம் வாருங்களேன், அம்மா அடிபட்டு செத்துப்போயிடுவாபோல இருக்குதே" என்று கதறிஞள்.

நவநீதம் சட்டென்று திலகத்தைப் பின் தொடர்ந்து உள்ளே சென்ருள். அவள் செல்லவே அண்டை அயலில் இருந்த ஆண் பெண்கள் சிலரும் பின்னல் சென்றனர். உள்ளே நவநீதம் கண்ட காட்சி பயங்கரமாயிருந்தது. மண்டையிலிருந்து பெருகும் ரத்தத்துடன் 'ஹோ' வென்று புலம்பியவண்ணம் தரையில் விழுந்து கிடந்தாள் பொன்னம்மாள். ரத்தத்தைக் கண்டதஞல் ஏற்பட்ட ஆத்திரம் பன்மடங்காக கையிலே கிடைத்த விறகுக் கட்டையுடன் யமதூதன்போல நின்ற சுந்தர கணபதியின் கோலம் பயங்கரமாயிருந்தது.

"எ பட்டி மகளே! என் வீட்டு விவகாரத்திலே உங்க வாத்திம்மா வந்து என்ன பண்ணமுடியும்? போய்க் கூப்பிட்டு வந்தியா கூப்பிட்டு?" என்று இரைந்தான் சுந்தரகணபதி.

"சுந்தரகணபதி! ஏன் இப்படிக் கூச்சல் போடுகிறீர்கள்? என்ன நடந்தது அப்படி? ஐயோ பாவம். பொன்னம்மாளே நோயாளி. ஏன் இப்படி அடித்துவிட்டீர்கள் அவளை?" என்று சாந்தமாகவே கேட்டாள் நவநீதம் அவனது பேச்சைப் பொருட்படுத்தாமல்.

"அது என் இஷ்டம். என் குடும்பத்திலே ஆயிரம் இருக்கும். அதையெல்லாம் நீங்க கேட்கவேண்டியதில்லை. உங்க ஜோலியைப் பார்த்துக்கொண்டு போங்கம்மா," என்று திமிராகவே பதில் சொன்ஞன் சுந்தரகணபதி.

"ஐயா! என் ஜோலியிலே இதுவும் சேர்ந்ததுதான். அதஞல்தான் கேட்கிறேன்" என்று அழுத்தந்திருத்தமாகப் பேசிஞள் நவநீதம்.

" ஆம்படையான் பொண்டாட்டி சண்டையிலே உங்க ஜோலி ஒண்ணும் கிடையாது அம்மா. போய் வாங்க," என்று சொல்லிவிட்டு சுந்தரகணபதி நவநீதத்துக்குப் பின்னால் நின்ற மக்களைப்பார்த்து " என் ஐயா உங்களுக்கெல்லாம் வீடு வாசல் வேலை வெட்டி ஒண்ணுமில்லே. வீட்டுக்குள்ளே புருஷனுக்கும் பொண்டாட்டிக்கும் நடக்கிற சண்டையைப்பற்றி உங்களுக்கென்ன ஐயா அக்கறை ? போங்க ஐயா போங்க, அப்புறம் நான் பொல்லாதவனாயிருப்பேன் ! " என்று கத்தினான்.

" அட இப்ப ரொம்ப நல்லவரு பாவம், இனிமேதான் இவரு பொல்லாதவரா இருக்கப்போருரு" என்று கூட்டத்தில் ஒரு குரல் கேட்டது."

" அட யார்ரா அவன் துடுக்குப் பயல் ? நாக்கை இழுத்துவச்சு அறுக்கிறேன் பாரு, உள்ளே நுழைந்ததுமில்லாதே பேச வந்துட்டான் பேச ! "

" சுந்தரகணபதி ! மரியாதைக்குறைவாக ஏன் இப்படியெல்லாம் பேசுகிறீர்கள் ? இதனால் யாருக்கும் லாபமில்லையே " என்று வினயமாகவே பேசினாள் நவநீதம்.

" ஏ ! வாத்திம்மா ! லாபநஷ்டக் கணக்கெல்லாம் உங்க பள்ளிக்கூடத்தோடே வச்சுக்குங்க. இங்கே வேண்டாம். சட்டப்படி பார்த்தால்கூட உங்களுக்கு என் வீட்டிலே நுழைந்து இந்த விவகாரத்திலே தலையிட அதிகாரமில்லே தெரியுமா ? "

" சுந்தரகணபதி ! சட்டம் மனிதன் செய்தது. மனிதனின் நல் வாழ்வுக்கென நியமிக்கப்பட்டது. அதுவே அவனை நரகக் குழியில் தள்ளுமானால் அதற்கு சமாதி கட்டிவிடலாம். பொன்னம்மாள் என்றைக்கும் உங்களிடம் அடிபட்டுச்சாகவே தான் சட்டம் இடங்கொடுக்குமானால் அப்பேர்ப்பட்ட சட்டத்துக்குப் பெண் குலம் தலை வணங்கப்போவதில்லை. பொன்னம்மா, எழுந்திரு, என்னுடன் வா, உனக்கு வேண்டியது ஒரு வாய்ச்சோறு, அதைக்கூட அளிக்கத் தகுதியற்ற இந்த ஆண்பிள்ளையுடன் என்ன வாழ்வு வேண்டியிருக்கிறது?' என்று கண்டிப்பாகவே பேசினாள் நவநீதம்.

அவள் பேச்சைக் கேட்டு ஒரு கணம் சுந்தரகணபதியே பிரமித்துப்போனான். அவள் குரலில் சிறிதும் ஆத்திரம் இல்லை. பதற்றம் தென்படவில்லை. பொறுமையும் விவகார ஞானமும் நிரம்பிய நிதானமான குரல் அது. ஆனால் ஒவ்வொரு வார்த்தையும் ஆணி அடித்ததுபோல அந்த ஆண்பிள்ளையின் செவிகளில் விழுந்தன. சுற்றியிருந்த மக்களும் அவ்வார்த்தைகளைக் கேட்டுப் பிரமிப்படைந்தனர்.

" யம்மாடி ! பொன்னம்மாளை நீ இட்டுக்கிறுதான் போ. நீ இட்ட வேலையைச் செய்துகொண்டு உன் காலடியிலேயே விழுந்து கிடக்கட்டும். எத்தனை நாளுக்குத்தான் இப்படி அடியும் உதையும் பட்டுச் சீரழிந்து போவா பாவம் ! " என்று ஒரு கிழவி கும்பலிலிருந்து பேசினாள்.

நவநீதம் பொன்னம்மாளிடம் சென்று அவள் மண்டையிலிருந்து பெருகிய ரத்தத்தைத் துடைத்து தோல் பெட்டியிலிருந்து மருந்து எடுத்துப் போட்டுக் கட்டு கட்டிவிட்டாள். பிறகு அவளுக்கு குடிக்கக் கொஞ்சம் தண்ணீர் கொடுத்து களைப்பைத் தீர்த்தாள். அதற்குள் மெல்ல சுந்தரகணபதி அங்கிருந்து நழுவிவிட்டான். திரண்டிருந்த ஜனக்கூட்டம் முழுவதும் வாத்தியாரம்மாளின் பக்கமாகத்தான்பேசும் என்பது அவனுக்குத் தெரிந்துவிட்டது. தன் பக்கம் பேச அங்கே ஆள் இல்லை. சட்டம் பேசிப் பார்த்தான் அவன். ஆனால் புத்தகத்துக்குள்ளிருக்கும் சட்டம் அந்த சமயத்தில் எப்படி அவன் உதவிக்கு வரமுடியும் ? அத்தனை பேரும் பொன்னம்மாளுக்கு ஆதரவாகத்தான் பேசுவார்கள் என்பதும் அவனுக்குத் தெரிந்ததே. ஆகவேதான் தன் ஜபம் சாயாது என்று நழுவிவிட்டான். ஆனால் மகா கொடியவன் அவன். ஈரமில்லா நெஞ்சினன். அவன் எப்படியும் சமயம் பார்த்துக்கொண்டு தான் இருப்பான். அதெல்லாம் பொன்னம்மாளுக்குத் தெரிந்ததுதான். ஆயினும் அன்று அதோடு போயிற்றே என்று நிம்மதியடைந்தாள் அவள்.

பொன்னம்மாளை அங்கேயே விட்டு விட்டுப் போவது தவறு என்று மக்கள் கருதினார்கள். நவநீதமும் அதே மாதிரிதான் எண்ணினாள். சுந்தரகணபதி மீண்டும் வந்து நையப் புடைப்பான் என்பது எல்லோருக்கும் தெரிந்ததே. இப்போது அவன் அடியுண்ட நாகம்போல இருப்பான். ஆகவே பொன்னம்மாளை நவநீதம் தன்னுடன் அழைத்து செல்வது என்று தீர்மானித்தாள்.

அண்டை அயலிலிருந்த மக்கள் ஒரு வண்டி கட்டிக்கொண்டு வந்தார்கள். பொன்னம்மாளையும் திலகத்தையும் வண்டியில் ஏற்றி விட்டார்கள். அதுவரையில் கதவு மூலையில் ஒளிந்துகொண்டு பயந்தபடியே நின்றிருந்த சின்னத்தம்பியும் " வாத்திம்மா ! நானும் உங்களோடே வந்துவிடறேன். இங்கேயிருந்தா நாயினு கொண்ணுபோட்டுடுவாரு " என்று சொல்லிக்கொண்டே ஓடிவந்து வண்டியில் ஏறினான். வண்டி நவநீதத்தின் வீட்டை நோக்கிச் சென்றது. பின்னால் நவநீதமும் அவள் தோல் பெட்டியைத் தாங்கிச் சென்ற மாணவனும் நடந்து சென்றனர்.

(தொடரும்)



பி. அண்ட் ஸி. மில்களின் புட்பால், ஹாக்கி கோஷ்டியினரை இப்படத்தில் காணலாம். இந்த ஆண்டிலே மில் புட்-பால் கோஷ்டியும், ஹாக்கி கோஷ்டியும் போற்றத்தக்கவாறு போட்டிகளில் விளையாடியிருக்கின்றன. இந்தக் கோஷ்டிகளுக்கும், மற்ற விளையாட்டு கோஷ்டிகளுக்கும் உற்சாகமளித்து ஆதரவு தரும் வெல்பேர் ஆபீஸர் திரு. நம்பியார் படத்தில் நடுநாயகமாக விளங்குகிறார்.

ரேடியோவில் காந்திஜி !

மகாத்மா காந்தியின் பேச்சுக்களையும் பிரசங்கங்களையும், பிரார்த்தனைச் சொற்பொழிவுகளையும் அகில இந்திய ரேடியோ சிறந்த முறையில் ஒலிப்பதிவு செய்து பின் சந்ததிகளும் காந்திஜியின் உபதேசங்களை அவர் வாய்மொழியாகவே கேட்க வசதி செய்திருக்கிறது. மொத்தம் 51 மணி நேரம் 22 நிமிஷம் நீடிக்கக்கூடிய இக்குரல் ஒலிப்பதிவில் அவர் 1948 ஜனவரி 30உ கொலை செய்யப்படுவதற்குச் சற்று முன் நிகழ்த்திய பிரசங்கம் வரையில் பதிவாகியிருக்கிறது. எற்கனவே இவைகளில் ஆறு தட்டுக்களை ஒரு கம்பெனி விற்பனைக்கு வெளியிட்டிருக்கிறது. அதேபோல் இன்னும் 40 தட்டுகளைப் பொதுஜன உபயோகத்துக்குக் கொண்டுவரும்படி அந்த ஸ்தாபனத்துடன் எற்பாடாகி வருகிறது. இவைகளில் காந்திய தத்துவங்களின் சாரமான அம்சங்கள் அடங்கியிருக்கும். ரெகார்டுகளான தட்டுக்களை தயாரிப்பதற்கு அகில 'இந்திய ரேடியோவின் சொந்த வேலை நிலையம் அமைந்து பணிபுரியத் தொடங்கிய பின் இவைகளின் பல பிரதிகள் எல்லாக் கிளை நிலையங்களின் உபயோகத்துக்கும் கொடுக்கப்படும். 1947 மார்ச் மாதம் டில்லியில் நடைபெற்ற ஆசிய உறவு மகாநாட்டில் காந்திஜி ஆங்கிலத்தில் 18 நிமிஷ நேரம் நிகழ்த்திய பிரசங்கத்தைப் பதிவு செய்த ரிகார்டையும் அகில இந்திய ரேடியோ இந்தியாவிலும் வெளி நாடுகளிலும் விற்பனைக்குக் கொண்டுவந்திருக்கிறது. மகாத்மா காந்தியின் ஆங்கிலப் பிரசங்க ஒலிப்பதிவு இது ஒன்றுதான் இப்போது இருக்கிறது.

—இந்திய சர்க்கார் செய்தி இலாகா.

பயில்வானைப் பாருங்கள்!



இந்தப் பயில்வானைப் பார்த்திர்களா? நெஞ்சங் குழியிலே ஒரு முனையும் நீண்ட மரத்திலே மறு முனையுமாக அழுங்கிப்போய் நீள நெடுக இருந்த இரும்புக் கம்பி வளைந்து குனிந்து திண்டாடும்படி செய்த வீரர் இவர். பக்கிங்ஹாம் மில் நூற்பு இலாகாவைச் சேர்ந்த இளைஞர் திருநாவுக்கரசுவுக்கு 25 வயதுதான். ஆனால் முக்கால் அங்குலம் கனமுள்ள இரும்புக் கம்பியை நெஞ்சிலே ஊன்றி வளைக்கும் இவரது திறமையைப் பார்த்துத் தான் ரஸிக்க வேண்டும். பலே-சூரர் இவர்.

மாணவரும் சமூக வாழ்வும்

மாணவர்கள் சமூக வாழ்க்கையில் ஊக்கத்துடனும் விசயத்துடனும் பங்கெடுத்துக் கொள்வதற்கான பழக்கமளிப்பதில் நியூயார்க் நகரத்திலுள்ள உபாத்தியாயர்களுக்கு நியூயார்க் 'டைம்ஸ்' பத்திரிகை உதவிபுரிகிறது.

சென்ற எழு வருஷங்களாக நியூயார்க் 'டைம்ஸ்' பத்திரிகை நியூயார்க் கல்வி போர்டின் ஒத்துழைப்புடன் 'கல்வியும் செய்தியும்' பற்றி பதினைந்து வார வகுப்புகளின் மூலம் பயிற்சியளித்து வருகிறது. பிராந்திய, தேசியப் பிரச்னைகளைப் பற்றி விவேகமான நடவடிக்கைகள் எடுப்பதற்குமுன் அன்றாடச் செய்திகளைப் பற்றித் தெரிந்து கொள்ள வேண்டியது அவசியம் என்ற அடிப்படையில் இந்தப் பயிற்சியளிக்கப்படுகிறது.

சர்வதேச, பொருளாதார, தொழிலியல், ராணுவ, விஞ்ஞான, கலாச்சாரச் செய்திகள் இந்தப் பயிற்சியில் சேர்க்கப்பட்டிருக்கின்றன. ஒவ்வொரு வார வகுப்பும் ஒரு தனி விஷயம் பற்றியது. வகுப்பின் ஆரம்பத்தில் டைம்ஸ் பத்திரிகை ஆசிரியர்கள் பிரசங்கங்கள் நிகழ்த்துவார்கள். பாக்கி நேரத்தில் கேள்விகளுக்குப் பதில் சொல்லப்படும்.

இந்தத் திட்டம் முக்கியமாக ஆரம்ப, செகண்டரி பள்ளிக்கூடங்களில் ஆங்கிலம், சமூக அறிவு, விஞ்ஞானம் ஆகியவற்றை கற்றுக் கொடுக்கும் ஆசிரியர்களுக்காக ஏற்படுத்தப்பட்டது. அன்றாட நிகழ்ச்சிகளைப் பற்றிச் சொல்லிக் கொடுப்பதற்கு உபாத்தியாயர்கள் பல வழிகளைக் கையாளுகிறார்கள். சிலர் செய்திகளைச் சரித்திரம், பொருளாதாரம், பூகோளம் ஆகியவற்றுடன் சேர்த்துச் சொல்லிக் கொடுக்கிறார்கள். மற்றும் சிலர் 'டைம்ஸ்' பத்திரிகையை மட்டும் வைத்துக்கொண்டு தனி வகுப்புகள் மூலம் சொல்லிக் கொடுக்கிறார்கள்.

எருமைப் பாலா? பசும் பாலா?

எருமைப் பாலுடன் பால் தூளைக் கலந்து மென்மைப்படுத்தி அதைப் பசும்பாலாக விற்பனை செய்யும் முறை பழக்கத்துக்கு வந்திருக்கிறது. இந்த ஏமாற்றைக் கண்டு பிடிக்கும் முறையை பங்களூரில் உள்ள பால்பண்ணை ஆராய்ச்சி நிலையம் உருவாக்கி யிருக்கிறது. மென்மைப்படுத்திய எருமைப்பாலை நான்கு மணிநேரம் 37° செண்டிக்ரேட் உஷ்ணத்தில் விட்டுவைத்திருந்தால் அதிலிருந்து ஒரு தனிப்பட்ட வாசனை வீசும். அந்தப் பாலை மாட்டு இரைப்பை (ரென்னட்) தொடர்பால் தயிராக்கும்போது, பசும்பால் உறைவதற்குப் பிடிக்கும் நேரத்தைவிட அதிக நேரம் பிடிக்கும். இந்த இரண்டு அம்சங்களையும் கவனித்து வீட்டிலேயே பரிசோதனை நடத்திப் பார்க்கலாம்.

ஆனால், எருமைப் பாலுடன் பால் தூளைச் சரியான முறையில் கலந்து உபயோகித்தால் கேடு ஒன்றும் இல்லை. சட்ட ரீதியாய் பாலில் எவ்வளவு கொழுப்புச் சத்து இருக்க வேண்டுமோ அவ்வளவு இருக்கும்படி பார்த்துக்கொள்ள வேண்டும்.

கிரீம் நெய்

வெண்ணெய் கடைந்து நெய் எடுப்பதற்குப் பதிலாக இப்போது கிரீமிலிருந்து (பால் கொழுப்பான ஏடு) நெய் தயாரிப்பது சகஜமாகிவருகிறது. தற்போது கிரீமிலிருந்து நெய் தயாரிப்பதற்கான பக்குவமுறைக்கு அதிக விறகும் காலமும் தேவைப்படுகின்றன. நெய்க்கசட்டில் அதிகக் கொழுப்பும் தங்கிவிடுகிறது. அந்த நெய்க்கு சாதாரண நெய்யின் நறுமணமும் இருப்பதில்லை. ஆனால் கிரீம் நெய் சீக்கிரம் கெடாமல் இருப்பதுடன் வேறு பல சிறந்த குணங்களையும் பெற்றிருக்கிறது. பாதகமில்லாத முறையில் கிரீம் நெய் தயாரிப்பதற்கான வேலை முறையை உருவாக்குவதற்கு இந்த நிலையம் பரிசோதனைகள் நடத்திவருகிறது. கிரீமைக் கழுவினால் கொழுப்புச் சார்பற்ற திடப்பொருள்கள் கரைந்துவிடுகின்றன என்பது தெரியவந்திருக்கிறது. நெய்யாக்குவதற்கு முன் கிரீமை 0.16 சதவிகிதம் புளிப்பு ஏறபடும்படி விட்டுவைத்தால் இயற்கை நெய்யின் நறுமணத்தை அதற்கு ஊட்டிவிடலாம் என்பதும் பரிசோதனைகளிலிருந்து தெரியவந்திருக்கிறது. மேலும் அதனால் 2—3 சதவிகிதம் அதிக நெய்யும் கிடைக்கிறது.

விளையாட்டு வீரர்

நாகப்பன்

மில் கால்பந்து விளையாட்டு கோஷ்டியின் பழைய புள்ளிகளில் திரு. நாகப்பனும் ஒருவரும், சுமார் பதினாலு வருஷ காலமாக மில் கோஷ்டியில் ஆடி வருகிறார். முன்னணியிலிருந்து விளையாடுவதில் இவருக்கு நல்ல அனுபவம் உண்டு. முன்னணி வரிசையில் எந்த இடத்திலிருந்துகொண்டும் விளையாடக்கூடிய திறமை இவருக்கு உண்டு. தமது கோஷ்டியின் வெற்றிக்காக உழைத்துப் பாடுபட்டு ஆடக்கூடிய ஆட்டக்காரர் இவர். தன் சொந்த புகழையோ, கீர்த்தியையோ பிரதானமாகக் கருதமாட்டார். கோஷ்டியின் பெருமைதான் தமது கௌரவம் என்று கருதும் சிறந்த மனப்பான்மை கொண்டவர் நண்பர் நாகப்பன். காளி ராமசாமி போன்ற ஆட்டக்காரர்கள் விளையாடிய காலத்திலிருந்து ஆடி வரும் திரு. நாகப்பன் கர்னாடிக் மில் பிரிபரேஷன் டிபார்ட்மெண்டில் பணியாற்றி வருகிறார்.

குட்டிக்கதைகள்

ஒரே வரி!

வாத்தியார் மாணவர்களை ஒரு கட்டுரை எழுதும்படி கூறினார். உணவும் வாழ்வும், விஞ்ஞானமும் விவசாயமும், விமானப்போக்குவரத்து அவசியமா? இப்படிப் பல பொருள்களைக் கொடுத்து எதாவது ஒன்றைப் பற்றிக் கட்டுரை எழுதச் சொன்னார். மாணவர்களுக்குக் கட்டுரை எழுதுவது கடினமாயிருந்தது. அவர்கள் அசிரத்தையா யிருந்தனர். வாத்தியார் பார்த்தார். ஒரு யுக்தி செய்தார்: "நீங்கள் பார்த்த கிரிக்கெட் விளையாட்டைப் பற்றி ஒரு கட்டுரை எழுதுங்கள்" என்றார்.

எல்லாப் பிள்ளைகளும் விறு விறு வென்று எழுதத் தொடங்கினார்கள். பக்கம் பக்கமாக எழுத்துக்கள் ஓடின. ஆனால் ஒரு மூலையில் இருந்த ஒரு பையன் மாத்திரம் ஒரு வரிகூட எழுதாமல் திரு, திரு வென்று முழித்துக்கொண்டிருந்தான்.

வகுப்பு மணியடிக்க இன்னும் சில விநாடிகள்தான் இருந்தன. மாணவர்கள் அநேகமாக எல்லோருமே கட்டுரை எழுதி முடித்து வாத்தியாரிடம் நோட்டுப் புத்தகத்தைக் கொடுத்துவிட்டார்கள். ஒரு சிலர் எழுதி முடிக்கும் தருவாயிலிருந்தனர்.

அப்போதுதான் ஏதோ முடிவுக்கு வந்தவன்போல, அந்த மூலையில் இருந்த பையன் பரபரவென்று தன் நோட்டுப் புத்தகத்தில் ஏதோ எழுதினான். அதைக் கண்ட வாத்தியாருக்கே ஆச்சரியமாயிருந்தது. "இத்தனை நேரம் சும்மா இருந்துவிட்டு, மணியடிக்கும் சமயத்தில் இவன் எழுதுகிறானே?" என்று எண்ணினார்.

எல்லாப் பிள்ளைகளும் தங்கள் கட்டுரைகளை முடித்து நோட்டுப் புத்தகங்களை வாத்தியாரிடம் கொடுத்துவிட்டார்கள்.

"டண" என்று மணி அடித்தது.

அந்தப் பையன் அவசர அவசரமாக வந்து தன் நோட்டுப் புத்தகத்தையும் வாத்தியாரிடம் கொடுத்தான்.

வாத்தியார் அந்த நோட்டுப் புத்தகத்தைத் திறந்து ஆவலுடன் அவன் என்ன தான் எழுதியிருக்கிறான் என்று பார்த்தார்.

ஒரே வரிதான் நோட்டில் இருந்தது. அது வருமாறு:—

"மழை பெய்து விட்டதால் விளையாட்டு இல்லை".

—எ. குட்டிபாபு.



வக்கீல் (கட்சிக்காரரிடம்) ரெட்டியாரே! இந்தக் கேஸ் விஷயமாக என் உண்மையான அபிப்பிராயத்தைச் சொல்ல வேணும் என்று கேட்டால் . . . .

கட்சிக்காரர்: தேவையில்லிங்க. தொழில் முறைப் பிரகாரம் சொல்லவேண்டிய யோசனையை மாத்திரம் சொல்லுங்க போதும். கேஸுக்கு அதுதானுங்களே முக்கியம்?

* * *

கோபாலன்: கோவிந்தா! உன் அம்மா அடிக்கடி சொல்லுவாளே, நீ சுத்த மண்டு. உனக்கு யாரும் வேலை கொடுக்க மாட்டாண்ணு?

கோவிந்தன்: அவள் அப்படித்தாம்பா சொல்லிக்கிட்டிருப்பா. இந்த மூணு மாச காலத்திலே நான் ஆறு பேர் கிட்ட வேலை பார்த்திருக்கேண்ணு அவளுக்குத் தெரியாது.

* * *

"நேற்று பார்த்தோமே. அந்த நாடகத்திலே காதல் சீன் எப்படி?"

"பலே பேஷ். கதாநாயகன் நடிப்பு பிரமாதம்."

"அவன் கதாநாயகியின் நிஜக் கணவனாமே."

"அப்படியிருந்துமா அவ்வளவு அழகாகக் காதல் நடிப்பு நடித்தான்? ஆச்சரியம்தான்."

விகட வெடிகள்

ஒரு பரீக்ஷை கேள்வித்தாளில் கண்டிருந்த ஒரு கேள்வி வருமாறு : உனக்குப் பிடித்த பொருள்களில் இரண்டையும், பிடிக்காத பொருள்களில் இரண்டையும், குறிப்பிடுக.

ஒரு மாணவன் பின்வருமாறு பதில் எழுதியிருந்தான்.

எனக்குப் பிடித்த பொருள்கள் :

(1) பாட்டி கொடுக்கும் பைசாக்காசு.

(2) பட்டாணிக்கடலை.

எனக்குப் பிடிக்காத பொருள்கள் :

(1) ரேஷன் அரிசியில் உள்ள கல்.

(2) கியூ வரிசை.

*　　*　　*

நோயாளி : டாக்டர் ஸார் ! என் உடம்பிலே என்ன வியாதிண்ணு பார்த்து சுத்தத் தமிழிலே புரியும்படியா சொல்லிடுங்க. வைத்தியர் பாஷையிலே என்னென்னமோ பேரையெல்லாம் சொல்லி என் மூளையைக் குழப்பிடாதிங்க.

டாக்டர் : அப்படியா ? சுத்தத் தமிழிலே சொல்லப்போளு சோம்பேறித்தனம் என்று பெயர்.

நோயாளி : அட எளவே. அப்படிண்ணு உங்க பாஷையிலே என்ன சொல்லுவீங்களோ அதையும் சொல்லிடுங்க. வீட்டிலே கேட்டா சொல்லணுமில்லே ?

*　　*　　*

துணி விலை ஏகத்தாருக ஏறியிருக்கும் தருணத்தில் ஒரு பெண்மணி கடைக்குப் போய்த் தனக்கு வேண்டிய துணிமணிகளைப் பார்க்கலாளுள். விலைவாசிகளும், சரக்கும் அவளுக்கு பீதியளிப்பனவாயிருந்தன. ஒரு கடையில் மட்டும் பின்வரும் விளம்பரம் பிரகாசமாகத் தொங்கவிட்டிருப்பதைக் கண்டாள் : “ உடலின் அழகை உவப்பாகக் காட்டும் உல்லாசமான உடைகள். சிக்கனமான தயாரிப்பு. அதிக நூல் செலவில்லை. அதிக பணச் செலவில்லை. உடலைப் பாதுகாக்கவே இந்த உடைகள் ; உடலை ஒளித்து வைப்பதற்கல்ல ! ”

விளம்பரத்தைப் பார்த்துவிட்டு உள்ளே சென்ற பெண்மணிக்கு ஐந்து கெஜம் கொசு வலைத் துணி கிடைத்தது.

ஒரு யாத்திரீகர் ஒரு சரித்திரப் பிரசித்தமான இடத்துக்குச் சென்ருர். அவருடன் சென்ற வழிகாட்டி ஒரு பெரிய பாறையைக்காட்டி “ இங்கே தான் கஜினிமாமூது மூன்ருவது தடவையாக விழுந்தான் ” என்ருன்.

யாத்திரீகர் : இதில் என்ன அதிசயம் ? இந்தப் பாறைமேல் எத்தனை தடவை ஏறினுலும் விழத்தான் வேண்டும். என் ? நான் கூடத்தான் விழுந்து விடுவேன்.

*　　*　　*

ஒரு மொத்த வியாபாரியிடம் ஒரு சில்லறை வியாபாரி சரக்குக்கு ‘‘ இண்டெண்ட் ’’ அனுப்பினுர். உடனடியாக சரக்கு வந்து சேரவில்லை. சில்லறை வியாபாரி சில நாட்கள் பொறுத்துப்பார்த்துவிட்டு, மொத்த வியாபாரிக்கு பின்வருமாறு தந்தி கொடுத்தார் : “ இண்டெண்ட் ஆர்டரை உடனே ரத்துச் செய்யுங்கள்.”

மொத்த வியாபாரியிடமிருந்து பின் கண்டவாறு பதில் தந்தி வந்தது : “ ஆர்டர் உடனே ரத்துச் செய்ய முடியாது. வரிசைக்கிரமமாக ரத்துச் செய்யப்படும்.”

புத்தகம் வாங்க வந்தவர் ; அட ! இந்தக் கடை தெரியாமல் எங்கெங்கேயோ தேடியலைந்தேன்.

புத்தக வியாபாரி : உங்களுக்கு என்ன வேண்டும் ?

வந்தவர் : ஆஞ்சநேயன் எழுதிய தமிழ் அகராதி.



பட்டாச்சியின் பள்ளிக்கூடத்தில் ஆண்டு விழா நடப்பதற்கு வேண்டிய ஏற்பாடுகள் செய்யப்பட்டுவந்தன. ஒவ்வொரு வகுப்பிலும் முதல், இரண்டாவது ஸ்தானங்கள் பெறக்கூடிய அதிகப்படியான மார்க்குகள் வாங்கிய மாணவர்களுக்குப் புத்தகங்கள் பரிசளிப்பது பள்ளிக்கூட வழக்கம். அந்த வழக்கத்தின் பிரகாரம் வகுப்புவாரியாக பரிசு பெற்றுள்ள மாணவர்களின் ஜாபிதா ஒன்று வகுப்புக்களில் படிக்கப் பெற்று நோட்டீஸ் போர்டில் ஒட்டப்பட்டது. பாட்மிண்டன், புட்-பால், ஹாக்கி, கிரிக்கட், டேபிள்-டென்னிஸ், வாலிபால் போன்ற விளையாட்டுகளில் போட்டிகள் நடத்தி அவற்றில் வெற்றி பெற்ற கோஷ்டிகளுக்கும் பரிசுகள் வழங்குவதெனத் தீர்மானமாயிற்று. விழாவுக்கு முதல் நாள் மத்தியானம் ஓட்டப்பந்தயம், நெடுகத்தாண்டுதல், குறுக்குத் தாண்டுதல், உயரக் குதித்தல், ஹர்டில்ஸ், கோணிப்பையில் இருந்து ஓடுதல், ரிலே பந்தயம், மியூஸிகல் சேர், ஸைகிள் பந்தயம் இப்படிப் பல பந்தய விளையாட்டுகள் நடத்தி, வெற்றி பெற்றோரைக் குறித்துக் கொண்டிருந்தனர்.

இவர்கள் எல்லோருக்கும் ஆண்டு விழா தினத்தன்று பரிசுகள் வழங்குவதென்று திட்டமிட்டிருந்தார்கள். ஆண்டு விழாவுக்கு ஜில்லா கல்வி அதிகாரி ஒருவரை தலைமை வகிக்கச் செய்வதென்றும், அவரது மனைவியைப் பரிசுகள் வழங்கச் செய்வதென்றும் முடிவு செய்யப்பட்டிருந்தது. அன்றைய தினம் விழாவைச் சிறப்பிக்கச் செய்வதற்காக ஆங்கிலம், தமிழ், தெலுங்கு, ஹிந்தி ஆகிய மொழிகளில் உள்ள நாடகங்களிலிருந்து பொறுக்கான காட்சிகள் சிலவற்றை நடித்துக் காட்டுவது என்று ஏற்பாடு செய்திருந்தார்கள்.

விழாவுக்குப் பத்துப் பன்னிரண்டு நாட்கள் முன்னிருந்தே மேற்சொன்ன நாடகக் காட்சிகளை அரங்கத்தில் நடிப்பதற்கு வேண்டிய ஒத்திகைகள் நடந்தேறிவந்தன. நாடகத்தில் ஆவல் உள்ள சில வாத்தியார்களும் மாணவர்களும் அவற்றில் நடிக்க முன்வந்தனர். தமிழில் சமூக நாடகம் ஒன்றிலிருந்து நல்ல படிப்பினை அளிக்கக்கூடிய சில காட்சிகளையும், புராண நாடகமாகிய பிரகலாத சரித்திரத்திலிருந்து சில காட்சிகளையும் நடத்துவதாக பள்ளிக்கூடத்திலுள்ள தமிழ்ச்சங்கம் ஏற்பாடு செய்திருந்தது. சமூக நாடகத்தில் நடிக்க நிறைய மாணவர்கள் முன் வந்தனர். அதற்குத்தக்க வேஷதாரிகளைப் பொறுக்குவதில் கஷ்டம் உண்டாகவில்லை. ஆனால் பிரகலாத சரித்திரத்தில் முக்கியமாக இரணியகசிபு வேஷத்திற்கும், பிரகலாதன் வேஷத்திற்கும் தக்க மாணவர்கள் கிடைக்கவில்லை.

தமிழ்ச் சங்கத் தலைவராகிய தமிழ் வாத்தியார் கடைசியில் ஒருவாறுகத் தீர்மானித்தார். பள்ளிக்கூடத்தில் தேகப்பயிற்சி போதிக்கும் வாத்தியார் வைத்தியலிங்கம் பார்வைக்கு வாட்டசாட்டமாக இருப்பார். கட்டான சரீரம். நல்ல உயரம். மீசையை முறுக்கிவிட்டு அதன்மீது ஒரு எலுமிச்சம் பழத்தை வைத்தால் அது அப்படியே நிற்கும். பள்ளிக்கூடப் பிள்ளைகளுக்கு சாதாரணமாகவே அவரைப் பார்த்தால் கொஞ்சம் நடுக்கம்தான். அப்பேர்ப்பட்ட பேர்வழிதான் அரக்க மன்னனுகிய இரணியகசிபு வேஷம் தரிக்கத் தகுதியானவர் என்று தமிழ் வாத்தியார் கருதினுர். வைத்தியலிங்கமும் அவர் கருத்துக்கு இசைந்தார். நாடகம் முக்கால் வாசி நடந்தமாதிரிதான். பிறகு பிரகலாதனுக



நடிக்க யாரைப் பொறுக்கியெடுப்பது என்று ஆராய்ந்தார்கள்.

ஒவ்வொரு வகுப்புக்கும் சென்று எந்தப் பையன் சின்னப் பையனாக இருக்கிறான்; குறுகுறுப்பும், சுறுசுறுப்பும் உள்ளவனாக விளங்குகிறான் என்று ஆராய்ந்து பார்த்துப் பட்டாச்சியையே பிரகலாதன் வேஷத்திற்குத் தேர்ந்தெடுத்தார்கள்.

பட்டாச்சிக்குப் பரம சந்தோஷம். தன்னை நாடகத்தில் நடிக்கத் தமிழ் வாத்தியார் பொறுக்கி எடுத்ததைப்பற்றி மிகவும் பெருமைப்பட்டுக்கொண்டது அது. அன்று மாலையிலேயே ஒத்திகை ஆரம்பமாயிற்று. நாடக டைரக்டர் முதலில் கதையை நடிகர்களுக்குச் சுருக்கமாக எடுத்துக்கூறினார். கதையைச் சொல்லிவரும்போதே பட்டாச்சிக்குக் கொஞ்சம் பயம் ஏற்பட்டது. பிரகலாதனை இரணியகசிபு பலவித தண்டனைகளுக்கு உள்ளாக்கியதைக் கேட்டபோது பட்டாச்சி தனக்கு நேரவிருந்த விபத்துக்களை எண்ணி நடுங்கியது.

கதை முடிந்ததும் பட்டாச்சி நாடக டைரக்டரைப் பார்த்து, "ஸார்! எனக்கு இந்தப் பிரகலாதன் வேஷம் வேண்டாம் ஸார்: வேறு யாருக்காவது கொடுத்துவிடுங்கள்: எனக்குப் பயமாயிருக்கிறது," என்று கூறியது.

டைரக்டர் கலகலவென்று சிரித்தார். "பட்டாச்சி! நிஜமாகவே உன்னை அந்த மாதிரி கஷ்டங்களுக்கு யாரும் உள்ளாக்க மாட்டார்கள். பயப்படாதே" என்றார். மற்ற நடிகர்களும் தைரியம் கூறினார்கள். ஒத்திகை ஆரம்பமாயிற்று.

இரணியகசிபுவாக நடிக்கும் வைத்திய லிங்கம் தன் பாடத்தைப் படித்தார். பிரகலாதனாக அவர் எதிரில் நடிக்கவே அஞ்சிய பட்டாச்சிக்கு அவரே தைரியம் தந்தார். அப்புறம் அது மெல்ல தன் பாடத்தையும் படித்தது. நாலைந்து நாட்களில் பாடம் எல்லோருக்கும் நன்றாக வந்துவிட்டது. டைரக்டர் நடிக்கும் விதத்தையும் சொல்லிக்கொடுத்தார். ஒத்திகை ரொம்ப ஜோராக நடந்துவந்தது. இரணியகசிபு ஒத்திகையின்போது செய்யும் அட்டகாசங்களைக் கண்ட பட்டாச்சிக்குப் பயமாகவே இருந்தது. ஆனால் மேடையில்லை, திரையில்லை, நாடக உடைகள் இல்லை, இதர நாடகச் சின்னங்கள் ஏதும் இல்லை. வாத்தியார்

வைத்தியலிங்கமும் பட்டாச்சியும் எதிரெதிராக நின்று பேசி நடித்துவந்தார்கள். கோபத்துடன் வாத்தியார் தமது கற்றை மீசையை முறுக்கி நடித்தபோதே பட்டாச்சிக்குக் குலைநடுக்கம் உண்டாயிற்று. அப்போதெல்லாம் அவர் அதைச் சமாதானப்படுத்தித் தனக்கு உண்மையிலேயே பட்டாச்சியின் மீது கோபம் ஏதும் இல்லை என்றும் அதெல்லாம் நாடகத்திற்காக வேண்டிய வெறும் நடிப்புதான் என்றும் சொல்லி உற்சாகமளித்துவந்தார். ஒத்திகையும் முடிந்து நாடகதினமும் வந்தது.

அன்றுதான் ஆண்டு விழா. பள்ளிக்கூட மண்டபத்தில் பரிசளிப்புக்காகவும் மற்ற ஆண்டு விழா நிகழ்ச்சிகளுக்கென்றும் பிரமாதமான ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன. மண்டபத்தின் ஒரு கோடியில் நாடக மேடையை நிர்மாணம் செய்து, அலங்காரமாக ஸீன்கள், வெளிச்ச ஏற்பாடுகள், ஒலி பெருக்கிகள் எல்லாம் அமைத்திருந்தார்கள். ஜில்லா கல்வி அதிகாரியும் அவரது மனைவியும் முறையே தலைமை வகிக்கவும், பரிசளிக்கவும் விஜயம் செய்திருந்தனர். பள்ளிக்கூடத்தலைமை உபாத்தியாயர் அவர்களை வரவேற்று அவர்களுக்கென்று அமைத்திருந்த உயர்ந்த ஆசனங்களில் அவர்களை இருக்கச் செய்தார். ஆண்டு விழா அதி விமரிசையாக நடந்தேறியது. பரிசுகள் வழங்கப்பட்டன. பிறகு நாடகக் காட்சிகள் ஆரம்பமாயின. முதலில் ஆங்கில நாடகத்திலிருந்து இரண்டு காட்சிகள் நடைபெற்றன. பிறகு ஹிந்தி, தெலுங்கு நாடகக் காட்சிகளும் நடந்தன. தமிழ் சமூக நாடகக் காட்சிகளும் பலத்த கரகோஷங்களுக்கிடையே நடைபெற்று முடிந்தன. கடைசியாக பிரகலாத சரித்திரத்திலிருந்து காட்சிகள்.

பட்டாச்சிக்குப் பெருமை தாங்கவில்லை. அதற்கு அழகான உடைகள் தரித்து முகத்திலே பவுடர் எல்லாம் போட்டு ரத்னகிரீடம் வைத்து வேஷம் கட்டியிருந்தார்கள். அது தன் அழகைக் கண்ணாடியில் பார்த்து மகிழ்வதிலேயே இருந்துவிட்டது. வாத்தியார் வைத்தியலிங்கமும் வேஷம் தரித்துக்கொண்டு தயாராயிருந்தார். அவர் வேஷம் தரித்துக்கொண்டதைப் பட்டாச்சி கவனிக்கவில்லை. மேடையிலிருந்து மணி அடித்தது. பிரகலாத சரித்திரம் தொடங்கியது. இரணியகசிபு மேடைக்குப் போய் நடித்தார். பிரகலாதனை இரணியகசிபு சந்திக்கும் கட்டம் வந்தது. பட்டாச்சி மேடைக்கு வந்தது.

மின்சார விளக்குகள் ஜகஜ்ஜோதியாக ஒளிவிசின. மேடையிலிருந்து எதிரே பார்த்தால் ஒரே ஜன சமுத்திரம். மண்டபம் முழுவதும் பள்ளிப் பிள்ளைகளும் வாத்தியார்களும், பிரமுகர்களும் நிறைந்திருந்தனர். மேடையின் அலங்காரம், ஸீன் ஜோடனை எல்லாம் பட்டாச்சிக்குப் பிரமிப்பை அளித்தது. வாத்தியார் வைத்தியலிங்கம் தன்னை அழைப்பதாக அறிந்து மேடைக்கு வந்த பட்டாச்சிக்கு வாத்தியார் எங்கே இருக்கிறார் என்று தெரியவில்லை. மேடை நடுவில் ஓர் உயர்ந்த சிம்மாசனத்தின்மீது தலையில் பெரிய கிரீடமும், இரு புஜங்களிலும் புஜகிருதிகளும், பளபளக்கும் பட்டாடையும் கையில் பிரம்மாண்டமான கதாயுதமும் பிடித்த ஓர் பயங்கரமான ராஜா ஆஜானுபாகுவாக வீற்றிருப்பதைப் பட்டாச்சி கண்டது. அதற்குப் பயம் உண்டாயிற்று,

இரணியகசிபு இடி முழக்கம் போன்ற குரலில் "பிரகலாதா!" என்று கூப்பிட்டான். பட்டாச்சியின் கைகால்கள் வெடவெடவென்று குலைத்தன. வாத்தியார் வைத்தியலிங்கம் ஒத்திகையில் அழைத்தது போல்தான் அழைத்தார். ஆனால் அன்று நாடகத்திற்கென்று ஒலி பெருக்கி அமைத்திருந்தபடியால் அவரது குரல் பன்மடங்கு உரக்கக் கேட்டது. இரணியகசிபுவாகிய வைத்தியலிங்கம் கூப்பிட்டுக்கொண்டே சிம்மாசானத்தை விட்டு இறங்கி ராஜ நடை போட்டு நடந்துகொண்டே பிரகலாதனாகிய பட்டாச்சியின் அருகே வந்து நின்றார். தோள்மீது உயர்த்திப் பிடித்திருந்த கதாயுதத்தைத் தொங்கப் போட்டார். "பிரகலாதா!" என்று அழைத்துக்கொண்டே மற்றொரு கையினால் பட்டாச்சியைப் பிடித்தார்.

"ஐயையோ!" என்று வீரிட்டலறியது பட்டாச்சி. அதன் சின்ன உடல் கிடு கிடுவென்று நடுங்கியது. சட்டென்று வைத்தியலிங்கத்தின் பிடியிலிருந்து விடுவித்துக்கொண்டு பட்டாச்சி வீரிட்டவாறே உள்ளே ஓடியது. தமிழ் வாத்தியாரும் டைரக்டரும் திரைமறைவில் இருந்தார்கள். பட்டாச்சியை அவர்கள் பிடித்து நிறுத்தினார்கள். "பட்டாச்சி! ஏன் பயப்படுகிறாய்!" என்று கேட்டார்கள். இதற்குள் மேடையில் திரை தொங்கவிடப்பட்டது. வாத்தியார் வைத்தியலிங்கமும் உள்ளே வந்தார்.

டைரக்டர் பட்டாச்சியைப் பார்த்து "பட்டாச்சி! நாடகம்தானே ஏன் பயப்படுகிறாய்!" என்று கேட்டார்.

"அந்த ராக்ஷதனையும், அவன் குரலையும் . . . ." என்று குளறிக் குளறிப் பேசியது பட்டாச்சி.

"அட அசடே! அது வாத்தியார் வைத்தியலிங்கம்தானே?" என்று தமிழ் வாத்தியார் சமாதானப்படுத்தினார்.

ஆனால் பட்டாச்சி மறுபடியும் மேடைக்கு வரவேயில்லை. ஆண்டுவிழாவும் அதோடு முடிந்தது.

Edited and Published by P. M. Kannan for the B. & C. Mills, and Printed by E. Sendall
at the Associated Printers (Madras) Ltd., Mount Road, Madras.